யிறுவெளியீடு. விலை 0—1—3. REGD. NO. M. 4642

# திராவிடநாடு

மலர் 3. இதழ் 33.

## திக்கெட்டும் தீ பரவுகிறது.

### அலகாபாத் மாணவிகளின் தன்மான உணர்ச்சி!

### இராமாயணவகுப்பில் பண்டிதரின் ஓட்டம்!

இராமாயணத்திலுள்ள ஒரு சுலோகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயத்தைப்பற்றி அலகாபாத்திலுள்ள ஒரு பெண் பள்ளிக்கூடத்து மாணவிகள், அச்சுலோகம் பெண்கள் சமுதாயத்தையே இழிவுபடுத்துகிறது என்றகாரணத்திற்காகத்தங்களின் எதிர்ப்பைக்காட்டிக்கொண்டனர்.

வகுப்பில், மாணவிகளுக்கு இராமாயணம் சொல்லிக்கொண்டிருக்கையில், சுந்தரகாண்டத்தில், "மத்தளம், சூத்திரர், மிருகங்கள், பெண்கள், கண்டிக்கப்படவேண்டியவைகள்" என்ற சுலோகத்திற்குப் பண்டிதர், கருத்துரை ஆற்றிக்கொண்டிருந்தசமயம் மாணவிகள் அதைஎதிர்த்துச் சரமாரியான கேள்விகள்கேட்டதுடன் பெண்களின் தன்மானஉணர்ச்சிக்கு மாறுகக் குறிப்பிடப்பட்டுள்ள இம்மாதிரியான நூல்கள் புதைக்கப்படவேண்டுமென்றும், பெண்கள் சமுதாயத்தை இழிவுபடுத்தும்நூல்கள் இராமாயணமாயினும், மற்றும் வேறெந்தநூலாயினும் அவைகள் அழிக்கப்படவேண்டுமென்றும்கூறினர்.

மாணவிகளின் எதிர்ப்பைக்கண்ட பண்டிதர், அந்தச் சுலோகத்தின் அர்த்தம் வியக்தமாக இருப்பதாகத்தணிந்த குரலில் பதில்கூறிவிட்டு, மேலும் பல கேள்விகளும், சிக்கல்களும் ஏற்படுவதைச் சமாளிக்கவும், பதில்சொல்லவும் வகையின்றி இராமாயணப் புத்தகத்தைத் தூக்கிக்கொண்டு ஓட்டம்பிடித்தார்.

தொடர் கதை,

★

சௌமியன்.

# பார்வதி பி. ஏ;

கதை கற்பனையே, கதையில்வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:—பார்வதியின் அன்புக்குப் பாத்திரமான குமார்மீது பழிசுமத்திய பார்த்திபன் என்ற கபடன், லோபி ஜமீன்தாரின் சொத்துமூலம் நாட்டுக்குத் தலைவனாகலாம் என்று மனப்பால்குடிக்கிறன். அவன்நடத்திய மாநாட்டிலே பார்வதியால் கலகம்விளைகிறது. அவனல் நிராகரிக்கப்பட்ட ஜெயா எனும் தாசி, எழுதிய கடிதத்திலே, குமார்பற்றிய தகவல் கொஞ்சம் தெரிகிறது. பார்வதி, தன்சிநேகிதி லலிதாவுடன் அதுபற்றி ஆலோசிக்கிறள், அவர்களை அக்ரமமாகப் பேசி அனுப்புகிறன் பார்த்திபன் அவன் தங்கியிருந்த ஓட்டல் சொந்தக்காரரான சங்கர ஐயர், பார்த்திபனிடம் பேசுகிறர் பிறகு...........]

மார்க்கசகாய பாதிரியார், அந்த வட்டாரத்துக் கிருஸ்தவத்தொண்டர். தலைவர் என்று அழைக்கப்படுவதற்கு ஏற்ற பண்புகளுடன்விளங்கிய அவர், தம்மை எவரும் தொண்டர் என்று அழைப்பதே, பெருமையுடைத்து என்று பெருங்குணத்துடன் கூறுவர். மார்க்கசகாயபாதிரியாரின் தகப்பனர் மணிகண்ட முதலியார், சைவர், தேவார திருவாசகத்திற்கு உரைகூறுபவர், சமரசசன்மார்க்கத்திலே ஈடுபட்டவர். எனவேதான், பிள்ளைக்குச் சன்மார்க்கம் என்று பெயரிட்டார். சன்மார்க்க முதலியாராகவேண்டியவர்தான், மார்க்கசகாயபாதிரியாரானர், சைவரின் திருக்குமாரர் திருச்சபையினரான தன்காரணம், தந்தைதனயனுக்குச் சற்று அதிகமாகச் சைவத்தைப்போதித்ததுதான். சைவசமயப்பிரசாரத்திலே தமிழகத்திலே தன்மகன் தலைசிறந்துவிளங்கவேண்டும், இன்னவருடைய குமாரன் இனிய தமிழில் இமையவனைப்பற்றி,எவரும் இதுவரைபேசிடாதமுறையிலே அருமையாக, அழகாக, உருக்கமாக உபதேசிப்பவர் என்று ஊரார்கூறக்கேட்டுத், தன் மகனைச் சான்றோனெனக் கேட்டுத்தாய்பூரிக்கத் தாயைக்கண்டு தானும்பூரித்துவாழவேண்டும் என்றநல்லஎண்ணத்திலேதான், மணிகண்ட முதலியார் தனது ஒரேமகன் சன்மார்க்கத்திற்கு, சைவத்தைச் சிறுவயதுமுதலே, சிறுகதை, பாடல்கள், பக்திப்பாசுரங்கள் ஆகியவைமூலம் ஊட்டினர். விளைவுதான் வேறுகிவிட்டது. உலகெலாம் சைவம் தழைத்தோங்கவேண்டும்என்ற உண்மையன்பற்று. மணிகண்டருக்கு உண்டானதிலே, யாரும்குறைகூறமுடியாது. எந்த மதத்திலே தமக்குப்பற்று இருக்கிறதோ அதனை மற்றவரும் பின்பற்றும்படிசெய்வதிலே அக்கரைகொள்வதுமுறை, எல்லோரும் இன்புற்றுஇருக்கச்செய்வது பெருநோக்கந்தான். ஆனல் இந்த நோக்கத்தை மணிகண்டர், மகன் உள்ளத்திலே பதியவைத்தமுறை விபரீதவிளைவைத்தந்துவிட்டது.

“அகிலஉலகிலும் சைவம் ஒன்றே உண்மையான சமயம், இதனை அறிந்திடு மகனே! நீ சைவன்என்று கூறிக்கொள்வதிலே பெருமைகொள். உன்சைவத்திற்கு நிகராகப்பிறிதோர் மதம்இல்லை என்று மார்தட்டிச்சொல்லு. பிறமதங்களால் பிறக்கும்மருள், எம்பெம்மானின் பெருமதத்தைப் பெற்றோருக்குப் பிறக்கும்அருள் என்றுகூறு. மந்திரமாவது நீறு என்றுகூறு. மறைகளின் முதலும் முடிவும் ஐந்தெழுத்திலே அடக்கம்என்று பாடு, ஐயனே அம்மையானுர் அப்பனுர், அம்மையப்பனுனர் என்ற அருந்தத்துவத்தை ஊராருக்கு உரைத்திடு, உனது சைவத்தை உலகெலாம்பரப்பு!” என்று மணிகண்டர், உருக்கமாக உபதேசிப்பார், மகனுக்கு. சன்மார்க்கம், சைவத்தின்மேன்மையை உணரும் நிலையைவிடத், தன்தகப்பனருக்குப் பிறமதங்களிலேஇருந்த வெறுப்பை உணரும் நிலையை விரைவாகப்பெற்றான், வியப்படைந்தான். சைவமே மெய் நெறி எனின், மேதினியிலே வேறுபல சமயங்கள்தோன்றினதேவிந்தை, தோன்றிய சமயங்கள் பட்டுப்போகாது நிலைத்தது அதனினும்விந்தை, தளிர்விட்டுப் பூத்துக்காய்த்துப் பழுத்திருப்பது விந்தையினும் விந்தை, அகிலஉலகுக்கும் ஏற்றது என்று பெருமையுடன் பேசப்படும் சைவம், தேய்பிறயாகிவருவது விவரிக்க முடியாத விந்தையாகவன்றோ இருக்கிறது என்று சன்மார்க்கம்யோசித்தான்.

“முதலைஉண்ட பாலனை வரவழைத்தவர் சைவர்.

மறைக்கதவினைத் திறந்தவர் ஓர் சைவர்.

எலும்பைப் பூம்பாவையாக்கியவர்எம் சைவர்.

ஏடு எதிர்நோக்கிச்சென்றிடச்செய்தவரும் எம்சைவர்.

எங்கும் என்றும் எத்தனையோ அற்புதங்கள்நடத்தியவர் எம்சைவர் என்று ஆவேசமொழிபேசுவார் மணிகண்டர். அவர்மொழிகேட்டுப் பரவசமடைந்தவர் பலர், சன்மார்க்கமோ, சோகமடைந்தான், சைவம் தன்னைக்காப்பாற்றிக்கொள்ள, மக்களிடம் மதிப்பைப்பெற, தனது உயர்வை உலகுக்கு உணர்த்த இவ்வளவு அற்புதங்களைநடத்திக்காட்டவேண்டிநேரிட்டதாகத்தெரிகிறதே, ஏன் இந்தச் சைவத்துக்கு இவ்வளவு துணை தேவைப்பட்டது. அறிவுக்குப்பொருந்தி அனுபவத்துக்கு உகந்ததாகி, நடைமுறைக்கு ஏற்றதாகஉளது சைவம்என்ற அளவோடுநில்லாமல், வேறுசமயங்களின் பேரால் நடத்தப்பட்டதாகக்கூறப்படும் அற்புதங்களைவிடச்,சைவசமயச்சார்பிலே நடைபெற்ற அற்புதங்கள், அதிகமானவை, அதிசயிக்கத்தக்கவை, என்று வாதிடவந்ததன்காரணம் ஏனே, என்று விசாரப்பட்டான். ஜாலவித்தைக்காரர், தத்தம் திறமைகளைப்பற்றிக்கூறிப்போட்டிப் பந்தயங்கள் நடத்திக்காட்டுவது போல, இந்த அற்புதங்களைப்பற்றியகதைகள்உள்ளனவே என்று ஆயாசப்பட்டான். அற்புதங்களைமட்டுமேநம்பி, மதங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதானல், இறக்கைகொண்டு வானத்திலே ஊர்திபறக்கச்செய்வதும், கடலுக்குள்ளே மூழ்கிச் செல்லும்கலத்தை உண்டாக்கிக்காட்டியதும், கண்காணுநாட்டிலேபேசுவதைக் காதால்கேட்டிடும் கருவியைக்காட்டியதும், மிகமிக மேலானமதத்தின் அறிகுறிகளாகவன்றோ கொள்ளப்படவேண்டும், என்றுயோசித்தான்.

“சைவசமயத்தின் அருமையும் பெருமையும் அறியாதார் ஏதும் அறியாதார் என்பேன். சன்மார்க்கம்! நமது நன்மார்க்கமாம் சைவத்தின் பெருமையை உணர்ந்த பக்திமான்கள், எதையும் தந்தனர் எம்மானுக்கு. பொன்னும் மணியும் பூணும், தந்தனர் என்று கூறுவேன், என்முன்னேர் இவ்வளவுதானு தந்தனர் இமையவனுக்கு,இருதயத்தைத் தந்தனர், எல்லாம்தந்தனர், தம்மையே தந்தனர். இதுஎதைக்காட்டுகிறது? எமது சைவத்தின் ஈடில்லாஉயர்வையன்றோ. கண்ணைத்தந்தான் காட்டில்வாழ்ந்த வேடன், பிள்ளையைக்கறியாக்கித்தந்தான் ஒரு பெரியோன், இல்லக்கிழத்தியைத் தந்தான் இயற்பகை! கேட்டாயோ அற்புதத்தை!!” என்று மணிகண்டர் கூறினபோது, முதலிலே சன்மார்க்கத்தின் மெய்சிலிர்த்தது, பலமுறை அதேவிஷயத்தைக்கேட்டபிறகு, ஏனே சைவத்திலேமட்டும் இவ்வளவுகடுஞ்சோதனை இருந்ததுஎன்று சந்தேகம்பிறந்தது, தெளிவுதோன்றியதும், பக்தியின்பேரால்

(11-ம்பக்கம் பார்க்க)

# அக்காலமில்லை ஐயன்மீர்!

16—10—44-ல் திருத்துறைப்பூண்டித் திராவிட இளைஞர் கழகத்திறப்பு விழாவில் கோ. சி. பெரியசாமிப் புலவர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

திருத்துறைப்பூண்டியிலுள்ள திராவிடத்தோழர்களே! பெரியார்களே!

இக்கழகத் திறப்புவிழாச் சொற்பொழிவு ஆற்ற வற்புறுத்தி எனைக்கொணர்ந்து சிறப்பித்த வன்றொண்டர்களே! நும்யாவருக்கும் எளியேனின் நன்றியறிவோடியைந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அன்பர்களே!

சேலத்தில் நிகழ்ந்த திராவிட மாநாட்டிற்குப்பின் ஆங்காங்குப் பல நகரங்களிலும் சிற்றூர்களிலும் திராவிடர் கழகங்கள் திறக்கப்பெறுகின்றன. திராவிட நாட்டைப்பற்றி ஆங்காங்கு தொண்டர்கள் சிறப்பாய்ச் சொற்பொழி வாற்றி வருகின்றார்கள். குடந்தையில் நிகழ்ந்த திராவிட மாணவர் மாநாட்டையான் திறந்து வைத்துச் சொற்பெருக்காற்றினேன். அம்மாநாட்டில் சிறப்புறப் பங்குபெற்றுத் தொண்டாற்றிய தோழர் தவமணிராசன், S, கருணானந்தம், நெடுஞ்செழியன், சனார்த்தனம், அன்பழகன், முதலிய தோழர்கள் அம்மாநாட்டின் எதிரொலியாகத் தமிழகம் முழுமையும் சென்று சொற்பெருக்காற்றித் தமிழ்மக்களைத் தட்டி எழுப்பி உணர்ச்சியூட்டி வருகின்றனர். இவ்விளைஞர்களின் தன்னல மற்ற தொண்டினைச் சலியாஉழைப்பினையாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

## திராவிட நாடு.

திராவிடநாடு திராவிடர்க்குஆக வேண்டும், என்ன விலை கொடுத்தேனும் எவ்விதத்தியாகங்களைச் செய்தேனும் நம் நாட்டை நாம் பெறவேண்டும், பெற்று ஆட்சி புரியவேண்டும், என்ற எண்ணங் காரணமாக, ஆர்வங் காரணமாகப் பல அறிஞர்கள், எத்துணையோ எதிர்ப்புகளையும், எத்துணையோ துன்பங்களையும் பொருட்படுத்தாது, தன்னல மறுத்துப் பணியாற்றி வரும்பொழுது, அப்பணிக்கு இடையூறாகச் சிலர் போலி அறிக்கைகளையும், போலி எதிர்ப்புக்களையும்வெளியிட்டு நமக்கு இடையூறு விளைவிக்கின்றனர். திராவிட நாட்டின் இயற்கைத் தன்மையை ஓராத சிலர், திராவிட நாட்டைப்பெற இயலுமா? என வினவுகின்றனர்.

திராவிட நாட்டில் நூற்றிற்குத் தொண்ணூற்று எழுபேர் திராவிடர்கள் வாழ்கின்றனர். ஏனையமூன்றுபேர் இந்நாட்டிற்கு உரியோர் அல்லராய் மத்திய ஆசியாவிலிருந்து ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு இந்நாட்டில் அண்டிப் பிழைப்பதற்கு வந்த கூட்டத்தினர்; அண்டிப் பிழைக்க வந்த மூவரே ஏனைய தொண்ணூற்று எழுவரையும் அடக்கி, ஒடுக்கிப் பொருளாதாரம், அரசியல், சமுகவியல், மதஇயல், முதலிய துறைகளில் தலைமை பெற்று இன்பவாழ்க்கை நிகழ்த்தினர். நிகழ்த்துகின்றனர். இத் தொண்ணூற்று எழுபேரும் இது நாளும், தங்கள்மொழி, தங்கள் நாடு, தங்கள் உரிமை, முதலியவற்றை மறந்து அம்மூவர்க்கும் அடிமைகளாய் வாழ்க்கை நிகழ்த்தினர். இக்கோரக்காட்சியைக்கண்ட நம் தலைவர்கள் சென்னை மண்டிலத்தில் பார்ப்பனரல்லாதார் கட்சியாகிய நீதிக்கட்சியைத் திராவிடர் கட்சியைத் தோற்றுவித்துத், திராவிடர்களே! தூங்கியதுபோதும், விழிமின்கள்! எழுமின்கள்! என நம்மக்களைத் தட்டியெழுப்பினார்கள். திராவிடத் தலைவர்களால் தட்டி யெழுப்பப்பட்ட திராவிடர்கள், எழுச்சியுற்றுத் திராவிட நாட்டின் அரசியல் உத்தியோகங்களில்100க்கு 97 பங்கு எங்கட்கும், மூன்று பங்கு பிராமணர்கட்கும் நியாயப்படிகொடுத்து நாட்டை அமைதியுற ஆட்சிபுரியுங்களென ஆங்கில அரசியலாரை வேண்டிக்கொண்டனர். திராவிட மக்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் அதன்படி சட்டமியற்றித் தந்தது. ஆனால் நடைமுறையில் "தகுதியென்று" ஒரு திரையின் கீழ்ப்பார்ப்பனியம் நுழைந்துகொண்டு இப்பதவிக்குத்தகுதியான ஆள் இவர் இல்லை; இப்பதவிக்குத் தகுதியானவர் இவர் இல்லை என்று பிராமணரல்லாதாருள் திறமை வாய்ந்த ஒவ்வொருவரையும் 'தகுதியில்லாதார், தகுதியில்லாதார்' என ஒதுக்கிவிட்டு 'சர்வம் பிராமணமயம் சகத்" என்றமுறையில் தாங்களே தகுதியுடையவர் என்ற இறுமாப்புடன் உத்தியோகமண்டிலம் முழுமையுங் கைப்பற்றித் திராவிட மக்களை அடக்கி ஆட்சி புரிந்து வந்தனர்; வருகின்றனர். இக்கொடுமைகளைக்கண்ட நமது மாபெருந் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் பிராமணிய ஆட்சிக்குஅடிப்படையாயுள்ள நாடு, சமயம், மொழி, கலை, எல்லாவற்றையும் ஒரே மூச்சாக எதிர்த்துத் தாக்கினார், தாக்கிவருகின்றார். இதனைக்கண்டு பார்ப்பனச்சேரி (அக்ரகாரம்) பதைக்கின்றது.

## 'திராவிடநாடு திராவிடர்க்கே'

என்ற முழக்கத்தை நமக்கு உணர்ச்சி தாரஎழுப்பித் தந்த பெரியாரை யாம் என்றும் மறத்தற்கு இயலுமோ? "நீதிக் கட்சியின் கொள்கை வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் பெறல் மாத்திரமன்று, திராவிட நாட்டைத் திராவிடர்க்கு ஆக்குங் கொள்கையும் நீதிக்கட்சியின் கொள்கை எனக் கட்சித்திட்டங்களுள் இக்கொள்கையையும் ஒன்றாக்கிக் கட்சிக்கு முறுக்கு ஏற்றிய பெரியாரைக் கட்சியிலுள்ள சில தன்னலக்காரர்கள் காய்வானேன்? இதுபோதும் இந்நாட்டிலுள்ள பார்ப்பனர்களை நோக்கிப்பெரியார் "நீங்கள் முன் மத்திய ஆசியாவிலிருந்து வந்ததே போன்று ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு இந்நாட்டை எங்களிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறுங்கள்" எனக்கூறினாரில்லை. பிராமணர் நலன்களும் கவனிக்கப்படும் எனக் கூறியுள்ளார். இங்ஙனம் இருக்கவும் பார்ப்பனர்கள் திராவிடர் இயக்கத்திற்கு மாறான எதிர்ப்புரைகளைக் கூறிவருகின்றனர். ஏன் கூறிவருகின்றனர்? திராவிட நாடு திராவிடர்கு ஆகவேண்டுமென்றால் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு பேராயுள்ள ஆட்சியில் நூற்றுக்கு மூன்று பேராயுள்ள ஆரியர்கள் அடங்கி ஒழுக வேண்டியவர்கள் தானே? இதனை எண்ணியே எதிர்க்கின்றனர். சிலர் திராவிட நாட்டுப் பிரிவினைத் திட்டம் விளங்கவில்லை என்றும் திராவிட நாட்டுப் படம் மாறுபடுகின்றது என்றும் கூறுகின்றனர். ஆந்திரநாட்டிலும், மலையாள நாட்டிலும், கன்னட தேயத்திலும், அம்மைப்புஇல்லையே என்கின்றனர். நாம் எழுப்பிய "திராவிட நாடு திராவிடர்க்கே" ஆக வேண்டுமென்ற கிளர்ச்சியில் தெலுங்கர்களும் கன்னடம் பேசுவோரும் பங்குபெற்றுப்பணியாற்றக் கடமைப் பட்டுள்ளனர்.

அவர்கட்கு விருப்பமில்லையேல் எங்களால் எதுவரையில் திராவிடநாட்டைச் சென்று ஆள இயலுமோ; அதுவரையில் சென்று ஆள முயற்சிப்போம், ஒருகாலத்தில் இமயமலையின்மீதும் தமிழ்க்கொடி பறக்கவில்லையா? எங்கள் முயற்சியால் எவ்வளவு தேயப் படங்களையும் எழுதிக்கொள்ள எங்கட்கு உரிமை இல்லையா?

## தேயப்படமும் எல்லைக்கோடும்.

ஒரு காலத்தில் ரோம் (Rome) சாம்ராஜ்யத்தின் காலனிகளாகவிளங்கிய சில நாடுகள் இப்பொழுது பிரித்தானியப் பேராட்சியின்கீழ் அடங்கிநிற்கவில்லையா? இப்பெரும்போரில் போலந்து நாட்டின் எல்லைக்கோடு எவ்வெவ்வாற்றில் மாற்றியமைக்கப்பட்டுளது? தன்னுரிமையுடன்வாழ்ந்த நாடுகளின் எல்லைகள் எவ்வாறு சிதைக்கப்பட்டன? தேயப்படங்கள் எவ்வெம் முறையில் மாற்றமுற்றுச் சிதைந்தன? இவற்றை எல்லாம் அறிந்த பின்னரும் எல்லைக்கோடுகளைப்பற்றியும் தேயப்படங்களைப்பற்றியும் யாம் வினவிக்கொண்டிருத்தல் அறிவுடைமையாகுமா?

(4-ம் பக்கம் பார்க்க.)

## அக்காலமில்லை ஐயன்மீர்.

3-ம் பக்கத்தொடர்ச்சி.

### திராவிட நாட்டுப்படம்.

இதுபொழுது பெரியார் ஈ. வெ. ரா. வால் குறிக்கப்படும் திராவிடநாடு, உலகப்படத்தில் இடம்பெற்றஉரிமைபெற்ற திராவிட நாட்டுப்படம் இஃது என வரைவோர், திராவிடநாட்டைத் தனியே பிரித்துச் சுட்டிக்காட்டும்பேற்றைப்பெற விரும்புவோர், திராவிடப் படத்தைப் பற்றி இதுபோது பேசாமல் நம்மோடு சேர்ந்துநின்று தொண்டாற்றித் திராவிடநாட்டைப்பெறப் பணி ஆற்றுவார்களாக!

### ஒன்றுபட்ட இந்தியா.

தென்னாட்டுப் பார்ப்பனர்களும், பார்ப்பனத் தலைவர்களும் இன்று ஒருமுகமாக "ஒன்றுபட்ட இந்தியா, ஒன்றுபட்ட இந்தியா" எனஉரக்கக் கூவுகின்றனர். இவர்கள் இவ்வாறு கூச்சலிடுவதன் நோக்கம்என்ன? வெள்ளைக்காரர்கள் ஒருமுகமாக இந்தியாவை ஆட்சிபுரிவதற்கு ஏற்றமுறையில் அஞ்சல்; (தபால்) தந்தி; சுங்கம்; முதலிய வரிகளை ஒருமுகமாக விதித்தல்வேண்டியும், தங்கள் ஆளுகைக்குச் சௌகரியமாகவும் இந்தியநாட்டை ஒரே ஆட்சியின்கீழ்க்கொண்டுவந்தனர். இங்ஙனம் ஒரேஆட்சியின் கீழிந்தியாவை வைத்துஆளும்வெள்ளைக்காரர்கள், காந்தியார் சொற்படி வெளியேபோய்விட்டார்களானல், இந்தியா முழுமையும் பரவிநின்று பார்ப்பன வெள்ளையர்களாகிய யாம் இந்நாட்டை ஆளலாமென்ற எண்ணத்தின்மேல் ஒன்றுபட்ட இந்தியாஎன உரக்கக்கூவுகின்றனர்.

### பிராமணஸ்தான்களைப் பொடியாக்குங்கள்.

இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு பார்ப்பனச்சேரியும் (அக்கிரகாரமும்) ஒவ்வொரு பிராமணஸ்தானு? இல்லையா? இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு கோவிலும் ஒவ்வொரு பிராமணஸதானு? இல்லையா? இந்நாட்டில் குளிக்குமிடங்களிலமைந்துள்ள ஒவ்வொரு படித்துறையும் ஒவ்வொரு பிராமணஸ்தானு? இல்லையா? இவைகள் பிராமணஸ்தான் இல்லை என்று எந்தப் பிராமணனுவது மறுத்தற்கியலுமா? இப்பிராமணஸ்தானில் ஆரியரல்லாத ஆதித்திராவிடர்களும் ஏனையோரும்புகுதற்கோ, புகுந்து குடியிருத்தற்கோ, குளித்தற்கோ, கடவுளைத் தொழுதற்கோ உரிமையுண்டா? ஒன்றுபட்டஇந்தியாவைப்பற்றிஉளறிக்கொட்டுகின்ற இவர்கள்இப்பிராமணஸ்தான்களை உடைத்தெறிய முன்வருவார்களா? பிராமணர்களே! இவைகளை முதலில் உடைத்தெறியுங்கள்!! பின்பு ஒன்றுபட்ட இந்தியாவைப்பற்றி யாம் ஒருமுடிவிற்குவாலாம்என அவர்கட்கு உரைபகருங்கள்! இவ்வுரிமைகளை ஆரியர்கள்விட்டுக் கொடுப்பார்களா?

### இந்துமதமும் பார்ப்பனியமும்.

இந்துமதம், பார்ப்பனர்உயரவும் அல்லாதார் தாழவும் அவர்கட்கு உதவிபுரிந்துளது; புரிந்துவருகின்றது. இந்துமதம் மிகஉயர்ந்த மதமென்றும் இந்துமத வேதங்கள் மிகப்புனிதமானவைஎன்றும், பகவத்கீதை, பகவான்சொன்னதென்றும், இவற்றை அரசியல் உத்தியோகத்தில் அமர்ந்துள்ள டாக்டர் அம்பேத்கார் தாக்கிப்பேசுதல் முறையன்றென்றும், கள்ளிக்கோட்டை சாமோரின், திருவனந்தபுர அரசர், கொச்சி அரசர், இவர்களெல்லாம் பிறமதத்தினரிடம், பிறநாட்டினரிடம் கருணைகாட்டினரென்றும்,இத்தகைய பரந்தநோக்கம் வேறுமதத்தில் கிடையாதென்றும் சசிவோத்தம சர். சி. பி. இராமசாமி ஐயர் இம்மதத்தின் வழக்கறிஞராகநின்று வாதாடுகின்ருர். சாமோரின் முதலியோர் எக்காரணங்கொண்டுபிறநாட்டு மக்களிடம், பிறமதத்தினரிடம் கருணைகாட்டினர்களோ யாம் அறியோம்! தந்நாட்டு மக்களைக்கொடுமைப்படுத்தி இழிவுபடுத்திஅடக்கிஆண்டுகொண்டு பிறநாட்டு மக்களிடம், பிறமதத்தினரிடம் இவர்கள் கருணைகாட்டினர்களானல், இஃது உண்மைக்கருணையாகுமா? இவர்கள் கருணைகாட்டும்படியான நெருக்கடி ஏற்பட்டிருக்கலாம்,அல்லது அரசியல் காரணங்கட்காக இவர்கள் அவர்களிடம் கருணையோடு நடந்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கலாம். இஃது ஓர் உதாரணமா?

### சில வினுக்கள்.

எந்த நாட்டிலேனும் எம்மதத்திலேனும் பிராமணரல்லாதார் வீட்டுப்பெண்கள் பூப்பெய்தினர்களானல், அவர்களை இந்நாட்டில் இந்துமதத் தலைவர்களாயுள்ள நம்பூதிரிப் பிராமணர்கள்புணர்ந்து தூய்மைப்படுத்தவேண்டுமென்றவிதியை நடைமுறையில்கொண்டு செலுத்தினற்போலக்கொண்டு செலுத்தியதுஉண்டா?

முஸ்லீம் மதக்குருக்களாய் அமைந்துள்ள முல்லாக்களும், கிறித்துவமதத் தலைவர்களாயமைந்துள்ள பாதிரிமார்களும் அவ்வம்மதத்திற்கு உட்பட்டபெண்களைஎல்லாம் புணர்ந்துதூய்மைப்படுத்துகின்றனரா?

மலையாளநாட்டிலன்றி, வேறுஎந்நாட்டிலேனும் ',யான் வழியில் வருகின்றேன், ஆண்டையார்களே! நீங்கள் விலகிக்கொள்ளுங்கள்! என்றுஅறிவிக்கும் முறையில் நாய் ஊளையிடுவதுபோன்று மனிதன் ஊளையிட்டுக்கொண்டு வழியில் நடக்கின்ருனு? இச்செயல் இந்து மதத்திற்கு குடன்பாடெனச் சர். சி. பி. கூறுவாரா? பிராமணரல்லாதார் திருமணம்செய்துகொள்ளும்பொழுது மணப்பெண்ஐந்து மாதம் கர்ப்பமுடையவளாக இருந்தாலும் இந்து சட்டப்படி அக்கலியாணம் செல்லக்கூடியதென எந்நாட்டிலேனும் எம்மதத்திலேனும் எந்நீதிமன்றமேனும் நீதிவழங்கியுளதா? இங்ஙனம் திராவிடர்களை இழிவுபடுத்தி, அவமானப்படுத்தி எழுதிவைத்திருக்கும் சாத்திரங்களைப் பிராமணரல்லாதார் போற்றிப் பூசிக்கவேண்டுமா? பேச்சுஇருக்கட்டும். செயல் ஒழுங்கீனமாகநடக்கலாமா? அரசியல் உத்யோகத்தில் அறமின்றிநடக்கலாமா?

வழக்கறிஞர்க்குரிய கல்வி பயின்றும் தொழில் நடத்தவகையறியாமல் திருப்புகழ்ப் பிரசங்கம்செய்துகொண்டு திரிந்த ஒருவரைத் தகுதிநோக்காது தன்கையில் அதிகாரம் இருக்கின்றதென்ற காரணத்தால் தன்னினப்பற்றுக்கொண்டு தகுதியில்லாதவரை ஜட்ஜாக்கலாமா?

தமிழருள் தாகூர்சட்டவிரிவுரையாளர் எனும் புகழ்பெற்றவரும் சட்டநுணுக்கப்போறிஞரும் ஆயஒருவரைப் பிராமணரல்லாதார் எனும் காரணம்கொண்டு, தன்கையில் அதிகாரமிருக்கிறதென்ற காரணத்தால் சட்டக்கல்லூரியினின்றும் வெளியேறவழிவகைசெய்யலாமா? இச்செயல் அதிகாரத்தை அறமின்றி மறச்செயலுக்காட்படுத்தியதாகக்கருதப்படாதா? டாக்டர்அம்பேத்கார் வாயால்பேசியவை குற்றமானல் இச்செயல்கள் குற்றமில்லையா? ஒவ்வொரு பார்ப்பனரும் தன்இனத்தவரையே தனக்குக் கீழ்வேலையிலமர்த்த முயற்சிக்கின்றனரே! இவ்வுத்தியோகங்கள் இவர்கட்குப் பரம்பரைச்சொத்தா?

### வேதமும் கீதையும்.

"ஓ! இந்திரனே! எங்கட்குஎதிரிகளாயுள்ள தஸ்யூக்களை (திராவிடர்களை) நீ அழித்துவிடு" எனவேண்டுகோள் விடுக்கும் "வேதங்களெல்லாம் முட்டாள்தனமானவை" எனடாக்டர் அம்பேத்கார் கூறியதற்காக ஆரியர்களுட்சிலர் ஆத்திரப்படுவானேன்? எதிரிகளை அழிக்கக்கடவுளைவேண்டும் நூலாகிய "வேதத்தை ஒருமதப் புத்தகமாக ஒப்புக்கொள்ள நாகரிகஉலகம் வெட்கமடையும்" என அம்பேத்கார் கூறியதில் குற்றமென்ன?

கொலைபுரியத்தூண்டும் கொலைநூலாகிய பகவத்கீதையை, வேறு எந்நாட்டிலும் காணப்படாத நான்கு வருணத்தை இந்நாட்டில் நாட்டுதற்குக் கருவியாயுள்ள பகவத்கீதையை, "ஒருவித உபயோகமும் உபதேசமும்இல்லாத நூல்" என அம்பேத்கார் கூறியதில் குற்றமென்ன? பெரியார். ஈ. வெ. ரா. அவர்கள் "திராவிடநாட்டை எங்களிடம் ஒப்படைத்துவிட்டுஎங்கள் ஆட்சியில் பிறர்விலகிநில்லுங்கள்" எனக்கூறுகின்ருர், இவர் கூறும் உட்பொருளை ஆய்ந்துதுணராத சிலர் தங்கள் அறியாமைகாரணமாக

(9-ம் பக்கம் பார்க்க)

# அஞ்சோம்! அஞ்சேல்!

G. சீனு.

நூற்றுக்கணக்கான சமயங்களும் ஆயிரக்கணக்கான சாமிகளும், பத்தாயிரக்கணக்கான சாத்திரங்களும், கோடிக்கணக்கான மூடச்சடங்குகளும் மலிந்து கிடக்கும் இந்நாட்டிலே தன் மதிப்பியக்கம் ஒரு கிழவரால், காந்தியாரின் வலது கரம் போன்றிருந்தவரால், காங்கிரசின்பேரால் வருடக் கணக்கில் சிறை சென்றவரால், கட்டாய இந்தி வேண்டா மென்பதற்காக அதே காங்கிரஸ் ஆட்சியில் சிறைப்பட்டு வெற்றி கொண்டவரால், வைக்கம் வீரரால் தோற்றுவிக்கப்பட்டு இன்றுபட்டிக்காட்டிலிருந்து பட்டினம் ஈறாகக் குழவி முதல் கிழவர்வரை யாவர் உள்ளத்திலும் பசுமரத்தாணிபோல் பதிந்து அதன்பேரால் திராவிடநாட்டுத் தீரஇளைஞர்கள் தங்கள்நலனுக்காக உரிமைக்காக எவ்விதத் தியாகமும் செய்யத் தயாராயிருக்கிறார்கள், தீவிரமாயிருக்கிறார்களென்றால் அது மிகையாகாது. சேலம் மாநாட்டிலே இளைஞர்கள் காட்டிய இனிய உற்சாகமும் ஆற்றிய அரிய உரைகளுமே இதற்குப் போதிய சான்றாகும். இப்படி ஒரு இயக்கம் ஒரு தனி மனிதரால் ஆரம்பிக்கப்பட்டு யாருடைய தயவு தாட்சண்யத்தையும் எதிர்பாராமல், எவருடைய தூற்றுதலையும் கூற்றினையும் பொருட்படுத்தாமல், பல கஷ்ட நஷ்டங்களுக்கிடையில் இவ்வளவு பேராதரவு பெற்றிருக்கிறதென்றால், உண்மையில் நம் நாட்டிற்கு இத்தகைய ஒரு இயக்கம் மிக மிக இன்றியமையாததென்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது, ஒரு சில சுயநலமிகளும் சூழ்ச்சிக்காரர்களும் தவிர. எனினும் அச்சூழ்ச்சிகள் எப்படியும் வீழ்ச்சியடையும், ஏன், அடைந்துவிட்டது சேலம் மாநாட்டிலே. ஆனால் அது அவர்கள் நினைவிலிருந்தல்ல, அந்நிலைமையின் காரணத்தால்.

சோம்பித்திரிதல், சோரம்புகுதல், சூதாடல், பொய்புகன்றநா, ஒருதரம் திருடிய கரம், ஒருமுறை பார்த்த காமுகப்பார்வை, கொலை செய்த மனம் இலஞ்சம் வாங்கிப் பழக்கப்பட்டவன் ஆகியவர்கட்கு அதிலேதான்யோசனை, பட்டம் பதவி வேட்டைக்காரர்களுக்கு அதுவே பைத்தியம், ஆகிய இத்தகைய குணங்கள் எளிதில் மாறாதன. அதனால் வீடுதிரும்பியதும் வீசினார்கள் அவர்கள் வஞ்சக வலையை. விட்டார்களில்லை அவர்கள் வசைபுராணத்தை. ஆனால் திராவிட நாட்டுமக்கள் தெரிந்துகொண்டார்கள் இவர்கள் வெற்றுரை வேந்தர்கள், விளம்பர விரும்பிகள் என்பதை. அவர்கள் வீசும் வலையில் அகப்பட்டுஅவதிப்படுபவர்கள் நாங்களல்ல என்று அவர்களுக்கு எடுத்துக்காட்டுகிறார்கள், அறிவுறுத்துகிறார்கள் ஆங்காங்கு திராவிடர் கழகங்கள் திறக்கப்படுவதன் வாயிலாகவும், சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை அடிப்படையாக ஆதரிப்பதன் மூலமாகவும்.

சந்திரோதய நாடகப் புத்தலைக்கழகத்திலே புத்தாண்டு வேலைத்திட்டமாகப் புரோகிதத்தைமறுக்கப் போவதாகச்சாம்பசிவன்புகலவும் புரோகிதனின்மருமான் வாதன்ஆத்திரப்பட்டுத்தன் அங்கத்தினர் பதவியை ராஜீநாமாச்செய்கிறேன்என்று வெளியேறி விடுவதும் பிறகு துரைராஜ் ஒழிந்தது ஒருபீடை, இனி ஆரியத்தையழிப்போம், திராவிடத்தை வளர்ப்போம், திராவிட ராட்சிபுரிவோம் என்ற முழக்கத்துடன் முடிவடைவதைப்போல, இதுவரை சந்தனப்பொட்டுக்காரர் சகவாசமும், சரிகைத் தலைப்பாகையர் சம்பந்தமும், பட்டம் பதவிப் பித்தர்கள் பக்கத்திலும் இருந்துவந்ததால் நம் நோக்கங்களை நேராகஎடுத்துச் சொல்ல இயலாமற்போய்விட்டது. ஆனால் சேலம்மாநாட்டுத் தீர்மானங்களோ அவர்களைத் தாங்களாகவே விலகும்படி செய்துவிட்டன. வாதனே தன் வர்க்கத்திற் கிழுக்காமென வெளியேறினான். இனம் ஒன்றாயிருந்தும் தன்னலமும் தற்பெருமையும்இவர்களைத் தனித்துப்போகச் செய்தது.

தன் மதிப்பியக்கமே திராவிடர் கழகம், திராவிடநாடு. தன் மதிப்பியக்கத்தின் தத்துவங்களே திராவிட நாட்டிற்கு வேண்டியதனிப்பெருந்தத்துவங்கள். தன் மதிப்பியக்கம் கடவுள் என்பது கற்பனைப் பெயர், வெறுங்கட்டுக்கதை. அதைப் பற்றிக்கவலைப்படாதே, அதற்காகக் காசைத் தொலையாதே என்று கூறுகிறது. மதம்மக்களின்முன்னேற்றத்திற்குமுட்டுக்கட்டை, மதங்கொண்ட யானையிடத்தில் நாம் என்ன எதிர்பார்க்க முடியுமோ, அதையேதான் மதத் தலைவர்களிடமும் எதிர்பார்க்க முடியுமென்றுதான்இயம்புகிறது. ஒருபாலுக்கொரு நீதி புகட்டுவதும், பொய்யும் புரட்டும் நிறைந்ததும், ஆபாசமும் அநாகரிகமும் மிகுந்ததுமான புராண இதிகாச சாத்திரங்களைப் பொசுக்கவேண்டுமென்றுதான் புகல்கிறது. பிறப்பினால் உயர்வு தாழ்வில்லையென்றும், தீண்டாமையேவேண்டாமென்றும், ஒற்றுமையைக் குலைத்து வேற்றுமையையுண்டாக்கும் சாதியே கூடாதென்றுதான் சாற்றுகிறது. பார்ப்பான் தானம், தருமம், தட்சணை தாம்பூலமென்று பகற்கொள்ளையடிப்பதும், லஞ்சம்கொடுத்து அபராதம் கட்டியதுபோல் காசையுந் தந்து அவன் காலில் விழுந்து அறிவீனமாகவும் அறிவிலிகளாகவும் நடத்திவரும் மூடச்சடங்குகளை முறியடிக்க வேண்டுமென்றுதான் முழங்குகிறது.

ஆகையால் திராவிடத் தோழர்களே அன்னியர் ஆட்சியழியவும், நம் நாட்டை நாமே ஆளவும், விஷமிகள் வீழவும், சுயமரியாதை சூழவும் வேண்டுமானால், பாழ்மதியை யோட்டி பகுத்தறிவையூட்டிச் சமதர்மத்தை நிலை நாட்டிவரும் பெரியார் அவர்களின் பெரும் பணிகளை சிரமேற்றாங்கிச் சிரமத்தைப் பொருட்படுத்தாது உறுதியுடனும் ஊக்கத்துடனும் போராடி அதனால் எத்தகைய இழிசொல் பழிச்சொல் ஏற்பட்டாலும் நாம் அஞ்சோம் என்று கூறுவதோடு, திராவிட நாடு திராவிடர்க்கே என்னும் சீரிய கொள்கையே நமதுகோரிக்கையாதலால் நம்மைக்கண்டுயாரும் அஞ்சேல் என்றும் கூறுவோம். வெற்றி நமதே!

---

## திராவிடர் கழகம்

### தர்மபுரி

7—10—44 மாலை 7-மணிக்குத் தர்மபுரி யங்மென்ஸ் கிளப் கட்டிடத்தில் தொழர். C. ராமசாமி அவர்கள் தலைமையின் கீழ் நடந்த தர்மபுரி தென்னிந்திய நல உரிமைச் சங்க நடவடிக்கைகள்.

தீர்மானம்

1. 27—8—44ல் சேலத்தில் நடந்த சென்னை மாகாண 16-வது ஜஸ்டிஸ் மாநாட்டின் தீர்மானங்களையும் அதன் நடவடிக்கைகளையும் இக்கூட்டம் ஒப்புக்கொள்ளுகிறது.

2. ஷை மாநாட்டின் நடவடிக்கைகளை எதிர்த்துக் கிளர்ச்சி செய்பவர்களை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன் (தலைவர் ஈ. வெ. ரா. அவர்களை) அவர்கள்பேரில் ஒழுங்குநடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. சேலம் மாநாட்டில் தீர்மானித்தபடி தர்மபுரி தென்னிந்திய நல உரிமை சங்கத்தின் பெயரை தர்மபுரி திராவிடர் கழகமென மாற்றிக்கொள்ளப்பட்டது.

---

## சீர்திருத்தத் திருமணம்

நாகை வெளிப்பாளையம் பெருமாள் சன்னதி மணமகன் இல்லத்தில் நாகை தேசிய கல்லூரித்தலைமை ஆசிரியர் T. V. சொக்கப்பா, M. A. L, T., அவர்கள் தலைமையில் அ. ராமலிங்கத்திற்கும், நாகை வேலாயுதம் பிள்ளை அவர்கள் புதல்வி பொ. கண்ணம்மாளுக்கும், அ. கோவிந்தசாமிக்கும், ஜெயங்கொண்டசோழபுரம் சா. வைரக்கண்ணு பிள்ளை அவர்கள் இளையபுதல்வி அமிர்தவல்லி அம்மாளுக்கும், வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

திராவிட நாடு.

காஞ்சி 29—10—44 ஞாயிறு

# உண்ணாவிரத மகிமை.

"உண்மையில் ஏற்கப்படும் உண்ணாவிரதம் ஆத்மாவையும் ஆண்டவனையும் கலக்கச்செய்கிறது" என்பதாகத் தோழர் காந்தியார், இன்னொரு உபவாசத்திற்குத் தயாராகிவிட்டேன் என்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இக்கூற்று, உண்ணாவிரதத்தைப் பொறுத்தவரையில் காந்தியார் பொய் சொல்லவில்லை என்பதையேகாட்டுகிறது. எப்படியென்றால், இதற்குமுன் பல தடவைகளில் காந்தியாரால்ஏற்பட்டஉண்ணாவிரதங்கள் எல்லாம் உண்மையாகவே ஏற்பட்டவைஅல்லவென்பது இதனால் நன்கு தெளிவாகின்றது. அவைஉண்மையான உண்ணாவிரதங்களாய் இருந்திருந்தால், காந்தியாரின் கூற்றுப்படி, அவருடைய ஆத்மா ஆண்டவனுடன் கலந்துவிட்டிருக்கும். ஆனால் கலக்கவில்லை. காந்தியாரின் ஆத்மாவும் ஆண்டவனும் ஒருவருக்கொருவர் இன்னும் வெகுதூரத்தில் இருப்பதாகவேதெரிகிறது. எனவே, இதுவரை காந்தியாரால் கையாளப்பட்டு வந்த உண்ணாவிரதங்களெல்லாம் வெறும் போலி உண்ணாவிரதங்கள் என்று நாம் கூறவில்லை; அவரேதான் கூறுகிறார். நாம் கூறினால் சும்மாஇருப்பார்களா, காந்தி பக்தர்கள்! உலகம்போற்றும் உத்தமரை ஒருவன் இவ்வளவு துணிச்சலாகக்கண்டிப்பதா? அவருடைய ஒப்புயர்வற்ற உண்ணாவிரதத்துக்கு ஊனந்தேடுவதா? என்றுஎம்மீது சீறிச்சினந்து சரந்தொடுத்திருக்கமாட்டார்களா? ஆனால், "என்னுடைய உண்ணாவிரதங்கள் ஒன்றும் உண்மையானவைஅல்ல" என்று காந்தியாரே கூறும்போது, அவர்களால் என்னசெய்ய முடியும்? பாவம், உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனத்திமாதிரி இருக்கிறார்கள்.

பொதுவாழ்வில் ஈடுபட்ட ஒருவன் தவறுசெய்வானானால், அதைக்கண்டிக்க யாருக்கும் உரிமையுண்டு. தலைவனாயினும் சரி, அல்லது சாதாரண தொண்டனாயினும்சரி தவறுசெய்தால், அதை மக்கள் கண்டிப்பர். ஆனால், காந்தியாரைப் பொறுத்தவரையில், அவர் இமயமலையளவு தவறுசெய்தபோதிலும் இம்மியளவுகூட அவருடைய பக்தர்கள் அவரைக்கண்டிப்பதில்லை. காரணம்: காந்தியாரை ஒரு அவதாரமாக்கிய குற்றம் அவர்களிடமிருப்பதே. அவரை ஒரு அவதாரமாக்கிய குற்றத்தை மறைப்பதற்காக, அவர் எவ்வளவு தவறுசெய்தபோதிலும் அவரைக் கண்டிப்பது முறையாகாதென்ற முடிவுடன் இருக்கும்ஒருகூட்டம், அவருடைய தவறுகளை எப்படிக்கண்டிக்கமுடியும்? இராமர்செய்த தவறுகளை இராமபக்தர்கள் கண்டிக்கிறார்களா? சிவன்செய்த தவறுகளை சிவபக்தர்கள் கண்டிக்கிறார்களா? இதுபோலத்தான் காந்தியாரின் தவறுகளையும் அவர்பக்தர்கள் கண்டிப்பதில்லை. ஆனால், குற்றம்புரிந்தவனே தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொள்ளும் போது, மற்றவர்கள் அதனை ஒப்புக்கொள்ள மறுப்பதுதான் விந்தையிலும் விந்தையாய் இருக்கிறது.

"நான் திருடினேன்"

"இல்லை, இல்லை! நீ திருடவில்லை!"

"இல்லை, நானேதான் திருடியவன், இதோ நான்திருடிய பொருள் என் கையிலேயே இருக்கிறது, பாருங்கள்"

"இல்லை, நீ என்னசொன்னபோதிலும் நாங்கள் நம்பவேமாட்டோம் நீ திருடவேஇல்லை"

"என்னஇது பெரிய சங்கடமாயிருக்கிறது; நான்தான் திருடியவன், இதோ நான்திருடியபொருள்; இதோ, இப்பொருளைத் திருட்டுக்கொடுத்தவர் என்னைப் பின்தொடர்ந்துவந்திருக்கிறார்; என்னை நம்புங்கள், நானேதான்திருடியவன்."

"இல்லை, இல்லை! நாங்கள்நம்பவேமாட்டோம், நீ திருடியவனே அல்ல."

என்பது போன்றல்லவா இருக்கிறது, காந்தி பக்தர்களின் போக்கு.

"உண்மையான உண்ணாவிரதத்தை நான் மேற்கொண்டிருந்தால், என்னுடைய ஆத்மா ஆண்டவனுடன் கலந்திருக்கும்; நானும் ஆண்டவனும் வேறுவேறு தனியாகவே இன்னும் இருக்கிறோம், ஆகையால் என்னுடைய உண்ணாவிரதங்கள் எல்லாம் பொய்யானவை, இதை நீங்கள் நம்பவேண்டாம்" என்ற தோரணையிலேயே 'உண்மையில் ஏற்கப்படும் உண்ணாவிரதம் ஆத்மாவாவையும் ஆண்டவனையும்கலக்கச்செய்கிறது" என்றுகூறுவதன்வாயிலாக உண்மையைக் கக்கியிருக்கிறார் காந்தியார்.

இதை ஏன் நாம் எழுதுகிறோமென்றால், காந்தியார் தம்முடைய உண்மையை வெளியிட்டபிறகும், தம்முடைய உண்ணாவிரதங்கள் உண்மையானவையல்ல என்று கூறியபின்னரும், மற்றொரு உபவாசத்திற்கு மகாத்மா தயாராகிறார்" என்று அவருடைய உண்ணாவிரதமகிமையைஉலகுக்குக்காட்டமுன்வருகின்றனரே காந்தி பக்தர்கள் என்று அவர்களின் அறியாமைக்கண்டு இரங்கியே, இனிமேலாவதுஅவர்களுக்குப் புத்திவரக்கூடாதா என்று எண்ணியே இவ்வுண்ணாவிரத மகத்துவத்தைப்பற்றி எழுதினோம். உண்மையை ஒப்புக்கொள்ள விரும்பாதார்க்கு எவ்வளவு சொன்னாலும் எவ்வளவு எழுதினாலும் பயன்தாராதென்பதை நாம் அறிவோம். ஆயினும், வளர்ச்சியடைந்துவரும் பகுத்தறிவுலகத்தில், இதுபோன்ற பித்தலாட்டங்கள் கலவாமல் இருக்கவேண்டுமென்பதற்காகவே இதுபற்றி எழுதநேர்ந்தது.

---

## பெரியாரைப் பின்பற்றுங்கள்

16–9–44 சனிக்கிழமை 7-மணிக்குத் தஞ்சை ஆஸ்பத்திரிக்கு எதிரில்அமைந்த பொதுத்திடலில் நிகழ்ந்த பெரியார் பிறந்ததினக் கொண்டாட்ட விழாவில் தலைமைதாங்கிய கோ. சி. பெரியசாமிப் புலவர் அவர்களின் முன்னுரைச் சுருக்கத்தின் ஒருபகுதி.

பெரியார் புதியதிராவிட நாட்டின் மறுமலர்ச்சியாயுள்ளார் என்று எண்ணுகின்றவர்கள் அவரைப்பின் பற்றுங்கள்! பெரியார் புரட்சிபுலகை ஆக்கித்தருவார் என்று எண்ணுகிறவர்கள் அவரைப்பின் பற்றுங்கள்! பெரியார்தத்துவத்திலிருந்து புதிய இனம் (சமுதாயம்) பூக்குமென்று எண்ணுகின்றவர்கள் பெரியாரைப் பின் பற்றுங்கள்! பெரியார் சமுகப் புரட்சிக்காரர் என்று அறிந்தவர்கள் பெரியாரைப்பின்பற்றுங்கள்! பெரியாரின் கொள்கைகள் ஒரு சமுகத்திற்கு எழுச்சியையுண்டாக்குமென்று எண்ணுகின்றவர்கள் பெரியாரைப் பின்பற்றுங்கள். பொதுவாழ்க்கையில் மக்களினம் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள் பெரியார் திட்டங்களில் உளவென்று எண்ணுகின்றவர்கள் பெரியாரைப் பின்பற்றுங்கள்! எத்தனையோ ஆண்டுகளாக வஞ்சகச்சுரண்டலுக்கும், அடிமைத் தளைகட்டும்கட்டுப்பட்டுக்கிடக்கும் வாயில்லாத மக்கள் தங்கள் அடிமைத்தளைகளை உதறித்தள்ளித் தங்கள் பிறப்புரிமையைப் பெற்று வாழ வழிகாட்டவந்தமாபெரும் தலைவர் பெரியார் என்று எண்ணுகின்றவர்கள் பெரியாரைப் பின்பற்றுங்கள்! பொருளாதார அரசியல் துறைகளில் சமுகத்திலிருக்கும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்கவந்த-ஒழிக்க வந்த உரவோர் பெரியார் என்று எண்ணுகின்றவர்கள் பெரியாரைப் பின்பற்றுங்கள்! நாடு உரிமை பெறவேண்டும், மொழி வளம்பெறவேண்டும், கட்சிபுருப் பெறவேண்டும், மக்கள் இன்பமுறவேண்டும் என்ற கவலையுள்ளவர்கள் பெரியாரைப் பின்பற்றுங்கள்! கொடுமை, கொடுங்கோன்மை, வஞ்சகச் சுரண்டல், சூது இவற்றை ஒழிக்கவந்த மாபெருந் தலைவர் பெரியார் என்று எண்ணுகிறவர்கள் பெரியாரைப் பின்பற்றுங்கள்! சமுக நிலை, மக்கள் நிலை, மக்கள்மனப்பான்மை இவற்றால் உருவாக்கப்படும் எழுச்சியின் உருவம் பெரியார் என்று எண்ணுகின்றவர்கள், வலியிழந்து உறுதியும் உணர்வும் குலைந்து உயிரும்ஊக்கமும் ஒடுங்கிக்கிடக்கும் திராவிட மக்களை ஒன்று கூட்டி உயிர் கொடுத்தவர்-உணர்ச்சி யூட்டியவர் பெரியார் என்று அறிந்தவர்கள், பெரியாரைப் பின்பற்றுங்கள்.

# நடந்ததும் நடப்பதும்.

அடடே நிறுத்திவிட்டார்களா! நான் பார்க்கவில்லையே! மறுபடியும்வைப்பார்களோ! எப்போது? மறுபடியும் அந்த நாடகத்தை நடத்துவார்களா என்பது மங்கள பாலகான சபையாரைச்சேர்ந்த விஷயம். தமிழ் நாட்டிலே இதுவரைஎவரும் இரண்டு நாட்களுக்குமேல் நடத்தாத நடத்தமுடியாத ஒரு நாடகத்தை வாரக்கணக்கிலே, நடத்தினர்கள் என்றால் அந்தச்செய்தி, நாடகசரிதத்தில் முதலிடம் பெறத்தக்கதல்லவா? அதைப் பார்க்காதவர்கள் சந்தர்ப்பத்தை இழந்தவர்கள்தான், என்று சென்னை வாசிகளிலே பலர் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கின்றனர். இன்னும் பல வாரங்கள்நடத்தலாமே, ஏன் நிறுத்திவிட்டார்கள்?என்று டிக்கட்கிடைக்காது திண்டாடியவர்கள் கூறுகின்றனர். எதைப்பற்றி! நடிப்பு, பாட்டு, கதை, காட்சிகள் உடைகள் முதலிய ஒவ்வொன்றிலும் அப்பழுக்குக்காணமுடியாத அருமையான அமைப்பிலேநடந்த பூம்பாவை புகழ் K. R. இராமசாமி நடித்த அந்த மனோஹராவைப்பற்றித்தான். மனோஹரா நாடகத்தில் கதாநாயகனாகவந்த K. R. இராமசாமி,ஞானசம்பந்தராகத்தோன்றிப்பக்தி நடிகர் என்ற பெயரைமட்டுமல்ல, மனோஹரன் வேடத்திலே அவர் சிறந்த வீரநடிகர் என்ற பெயரையும் பெற்றுவிட்டார். அந்த மகத்தான மனோஹரா 16-10-44ல் முடிவடைந்தது. என்னகாரணத்தாலோ, முப்பத்திமூன்று நாட்கள் நடந்த மனோஹராவுக்கு வெற்றிவிழாக்கொண்டாடவில்லை. இப்பொழுது 21—10—44 முதல், மங்கள பாலகான சபையார் இழந்தகாதல் நாடகத்தை நடத்திவருகிறார்கள். அரியகாட்சியமைப்பு, லேட்டுகள், சிரியநடிகர்கள், சிறந்த உடைகள் முதலிய அம்சங்களோடு இழந்தகாதல் சிறந்து விளங்குகிறது. சோமநாதம் பிள்ளையாக நடிக்கும், தோழர். K. T. சந்தானம் தனது நடிப்பின்மூலம் சிறந்த நடிகர் என்பதை நிரூபணம்செய்கிறார். ஜெகதீஸ்வேடத்தில்வரும் தோழர். S. V. சகஸ்ரநாமம் உயர்ந்த வில்லன்நடிகர். சில இடங்களில் அவருடைய நடிப்புப் பார்ப்போர்க்கு மயிர்க்கூச்சலையுண்டுபண்ணுகிறது. கதாநாயகி பத்மாவாக நடிக்கும் K. R. கிருஷ்ணன். இயற்கையான பெண்மைக்குணங்களுடன் தத்ரூபமாக விளங்குகின்றார் எப்பொழுதும்போல, நடிக்கிறார் ஜெயபாலாகநடிக்கும்தோழர் T. K. சம்பங்கி. என் வேலைக்காரவேணுவாக நடிக்கும் M. E. மாதவன் நடிப்பில்தான் குறைகாணமுடியுமா? இயற்கையான பேச்சு, கோர்த்தியானநடிப்பு இரண்டும் அவரிடத்தில் போட்டியிடுகின்றன. மற்றப்படி இந்நாடகத்தில்வரும்ஒவ்வொரு நடிகரும் பாத்திரத்தை உணர்ந்து நடிக்கும் உயிர்நடிகர்களாகத் திகழ்கிறார்கள். பாட்டுக்கச்சேரி பரதநாட்டியம் முதலியவையும்உண்டு. நகைச்சுவை அரசரின், மேற்பார்வையில் மங்கள பாலகானசபை புதுஉருவடைந்து, ஜெகஜ்ஜோதியாக விளங்குகிறது. நாடகம் சென்றுபாருங்கள் என்றுகூறவும்வேண்டுமா? இழந்த காதலைப் பார்க்காதவர்கள், சந்தர்ப்பத்தை இழந்தவர்களே. நடந்தது மனோஹரா. நடப்பது இழந்தகாதல்.

---

## பெரியார் பிறந்தநாள் விழாவில்

### முதுபெரும் புலவரின் முழக்கம்

### சலகண்டபுரம்.

"நான் சைவசித்தாந்தக் கூட்டங்களிலும் கலந்து கொள்ளுகிறேன். சுயமரியாதைக் கூட்டங்களிலும் கலந்து கொள்கிறேன். இதனால் என்னைச் சிலர் கொள்கையற்றவன், பச்சோந்தி என்றுகூடச் சொல்வார்கள். அது தவறு, எனக்கும் பெரியாருக்கும் கொள்கையில் சில வேறுபாடுகளுண்டுதான், எனினும் பொது மக்களுக்கு அவர் செய்த தொண்டு மிகப் பெரிது. அதனை நான் மதிக்கிறேன், போற்றுகிறேன். யாகத்தின் பெயரால் பசுக்கொலை முதலிய கேடுகளைச் செய்தவர்களை எதிர்க்கப்புத்தர் பெருமான் தோன்றினர். தமிழரையும், தமிழையும், அடிமைப்படுத்திவரும் சுயநலக் கூட்டத்தை எதிர்க்கப் பெரியார் அவதரித்துள்ளார். பெரியார் தோன்றியிராவிடில் நாம் மிகக்கீழான நிலையில், நம்மை வெட்கமில்லாமல் "சூத்திரன்" என்று அழைத்துகொள்வதில் பெருமைகொள்ளும் பேதைமையில் இருந்திருப்போம்.

தமிழனின் தன்மானக்குரல், புத்துணர்ச்சி, உள்ளக்கொதிப்பு, முன்னேற்றம் எல்லாவற்றிற்கும் பெரியார்தான் காரணம். பெரியாருக்கு வயது 66. எனக்கு 67. இந்த முறையில் அவர் எனக்கு இளைய சகோதரர்தான், எனினும் அவர் ஆற்றிவரும் அறிவுத்தொண்டினைப்பார்க்கும்பொழுது அவரைஎனக்கும் பெரியவரென்றே நான் மதிக்கின்றேன்.

கடவுளை மறுப்பது என் கொள்கையல்ல, கடவுளின் பெயரால் அக்கிரமங்கள் நடப்பது கண்டுதான் கடவுளை மறுக்கிறார்கள். பாமரமக்கள் விழிப்புற வேண்டும். நான் சுயமரியாதைக்காரன். எனக்கு சுயமரியாதை வேண்டாமா? ஒவ்வொரு மனிதனுக்கும் சுயமரியாதை வேண்டும்" என்று 18—10—44மாலை இவ்வூர் திராவிடகழகத்தின் சார்பில் வாலிபால் மைதானத்தில் நடைபெற்ற பெரியார் பிறந்தநாள் விழாவுக்குத் தலைமைதாங்கிய முதுபெரும் புலவர் ஆசிரியர் அ. வரதநஞ்சயப்பிள்ளை அவர்கள் கூறினார்கள்.

மதிப்புரை.

## பெரியார் பெருந் தொண்டு

பெரியார் பெருந்தொண்டு என்ற பெயருடன் ஒரு காவியநூல் எமது பார்வைக்கு வந்துள்ளது. இந்நூலாசிரியர் நீண்டநாள் சுயமரியாதை இயக்க அன்பர், பகுத்தறிவாளர், கவிஞர், புலவர், புதுவைத் தோழர் S. சிவப்ரகாசம் அவர்கள்.

பெரியார் அவர்கள் பொதுவாழ்வில் ஈடுபட்ட நாள் தொடக்கம் இன்றுவரை நம் மக்களுக்காகச் செய்த அரிய சேவைகளையும் சொல்லொணாத் தியாகங்களையும், எதிர்ப்பின் உச்ச நிலையில் நின்று எவ்வாறுபணி யாற்றி வெற்றியடைந்து வருகிறார் என்பதையும், காவியநடையில் மிகவும் தெளிவாக, விளக்கமாக, விரிவாக எடுத்துக்கூறியிருக்கிறார் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. இந்நூலை வாங்கிப் படிப்போர் அதனை நன்கறிவர். இந்நூலின் விலை அணா எட்டு.

கிடைக்குமிடம்:— பூங்கொடிப்பதிப்பகம், புதுச்சேரி. தன்மான இயக்க அன்பர்கள், ஒவ்வொருவர் கையிலும் இந்நூல் ஒன்று அவசியம் இருத்தல் வேண்டும்.

---

## வாழ்க்கை ஒப்பந்தம்.

சிதம்பரம் தாலுக்கா பூந்தோட்டம் கிராமம் தோழர் சாமிதுரைக்கும் தோழியர் ருக்மணிக்கும்;தோழர் கைலாயத்திற்கும் தோழியர் திருவாட்சிக்கும் ஆவணி 9ம்தேதி தோழர்சிங்காரவேல்சாமி அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றதை முன்னிட்டுத் திராவிட நாடு வளர்ச்சிக்காக ரூ. 2. நன்கொடை தரப்பட்டது.

திருக்காட்டுப்பள்ளிக்கடுத்த இளங்காட்டுப்படுகையில் 10-9-44ல் தோழர் கருப்புச்சாமிக்கும் தோழியர் கமலாம்பாளுக்கும் நடந்த சீர்திருத்தத் திருமணத்தைமுன்னிட்டுத் திராவிடநாடு வளர்ச்சிக்காக ரூ. 1. நன்கொடைதரப்பட்டது.

---

## பெரியார் பிறந்த விழா

11—10—44ல் பெரியார் பிறந்தினவிழா M. பாஸ்கரன் அவர்கள் தலைமையில் வெகுவிமரிசையாக நடந்தேறியது. அவ்வமயம் K. P. பாலசிங்கம், B. A., மெச்சலா, முதலியோர் பெரியார் தொண்டைப்பற்றிப் பேசினார்கள். சிற்றுண்டி எல்லோருக்கும் வழங்கப்பட்டது. இச்சிறு கிராமத்தில் திராவிட கழகத்திற்கு 70 உறுப்பினர்கள் இதுவரை சேர்க்கப்பட்டு இருக்கிறது.

## நாகை தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்நிறைவேற்றிய தீர்மானங்கள்

——

தோழர் T. P. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் தெ. இ. ந. உ. சங்க நிர்வாகக் கூட்டம் கூடியதில் கீழ் வரும் தீர்மானங்கள் ஏகமனதாகத் தீர் மானிக்கப்பட்டன.

1. நாகை தென்னிந்திய நலவுரிமைச் சங்கமாகிய இச்சங்கத்தைச் சேலத்தில் சென்ற 27—8—44ல் கூடிய மாகாண மாநாட்டுத் தீர்மானத்தை அனுசரித்துத் திராவிட கழகமென மாற்றுவதென இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

2. சேலம் மாகாண மாநாட்டில் தீர் மானித்தபடி புதிதாய்ச் சேர்க்கப்பட்டு வரும் அங்கத்தினர்களைக்கொண்டு விரை வில் தேர்தல் நடத்த வேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

3. தேர்தலைவிரைவில்நடத்தத்தோழர் கள் S,P. கந்தசாமிப்பிள்ளை,T. P. ஆறு முகம், R. V. கோபாலன், ஆகியவர் களை நியமித்து நடத்தும்படி இக்கூட் டம் அவர்கட்கு அதிகாரம் அளிக்கிறது.

——

## செல்வர் வளர்ப்புச் சங்கம்

வாங்கல் செல்வர் வளர்ப்புச் சங்க வாராந்திரக்கூட்டம் 15—10...44 திங் கட்கிழமை மாலை 7-மணிக்கு நடந்தது. அவ்வமயம், V. M. நெடுஞ்செழியன், தலைமை வகித்தார். V. P. அன்பழகன், அவர்கள் நாமும் நமது மக்கள்நிலைமையும் என்பதுபற்றிப் பேசினார். V. M. பாண் டியன் அவர்கள் திராவிட நாடுபிரிவினை பற்றிப்பேசினார். பிறகு V.A. ராவணன் அவர்களும் V.P. செங்குட்டுவனார் அவர் களும் சேலம் மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை ஆதரித்துப்பேசியதுடன் நமது கழகம் (செல்வர் வளர்ப்பு சங்கத் தை) திராவிடர்கழகமென்று மாற்றிவிட வேண்டுமென்று அவர்கள் கொண்டுவந்த தீர்மானங்களைக் கூட்டத்தில் ஏகமன தாய்த் தீர்மானிக்கப்பட்டது.

——

## திராவிட மாணவர் மாநாடு

தமிழ்நாடு திராவிட மாணவர் மா நாட்டு வரவேற்புக் கழகக் கூட்டம் கீழா வணிமூலவீதி, 7ல் 7—10—44 காலை 10-மணிக்குக் கழகத்தலைவர் மீ. தங்க ராஜ் தலைமையில் கூடிற்று. அவ்வமயம் டை மாநாட்டை நவம்பர் 12-ல் மதுரை யில் நடத்துவதாகவும், மாநாட்டிற்குத் தலைவராக பச்சையப்பன் கல்லூரித் தோழர் P. ஜனார்த்தனத்தையும், திரா விடத்தலைவர்களையும், அறிஞர்களையும், மாநாட்டில் அறிவுரையாற்ற அழைப்ப தாகவும், தீர்மானிக்கப்பட்டது,

## திராவிடர் கழகம்.

22—10—44 ஞாயிறு 7-மணிக்கு குறிஞ்சிப்பாடியில் கடலூர் ஆ. திராவிட மணி அவர்களால் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது. தோழர்கள் வெ. கிருஷ்ணசாமி தலைவர், கு. திருநாவுக் கரசு துணைத்தலைவர், இரா. சரவணன் செயலாளர், சொ. சுப்பிரமணியன் பொருளாளர், மற்றும் மூவர் உறுப்பி னர்களாகக்கொண்ட திராவிடர் கழக செயற்குழு ஒன்று நிறுவப்பெற்றது.

ஃ ஃ ஃ ஃ

### கல்வார்பட்டி.

இவ்வூரில் தோழர். இல. வீரராசன் முயற்சியால், 25. உறுப்பினர்கள்சேர்த்து திராவிடர் கழகம் நிறுவப்பட்டுத் தோழர் கள். ஜீ. இலட்சுமணன் தலைவராகவும் இல. வீரராசன் செயலாளராகவும்பொரு ளாளராகவும் ஜி. வெங்கடாசலம் ஆர். இராகவன் துணைச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஃ ஃ ஃ ஃ

### ஓமலூர் தாலூக்கா.

முன் அறிவிப்பின்படி இவ்வூர் திராவிட கழகத்தில் சென்ற 14—10—44 மாலை மேற்படி கூட்டம் ப. கண்ணன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது, கட்சியின் எதிர்காலம் பற்றியும் முன்னேற் றம் பற்றியும் பல தோழர்கள் பேசினர். பின்னர் அடியில்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

1. அண்மையில் சேலத்தில் பெரியார் இராமசாமி அவர்கள் தலைமையில் நடை பெற்ற மாகாண மாநாட்டின் முடிவுகளை இச்சங்கம் ஒப்புக்கொண்டு அவற்றின்படி வேலை செய்யத்தீர்மானிக்கிறது.

2. டை மாநாட்டின் தீர்மானங்களுக் கேற்ப நமது தாலூக்கா சங்கத்தின் பெயரை 'ஓமலூர் தாலூக்காத் திரா விடர் கழகம் என மாற்றப்பட்டது.

ஃ ஃ ஃ ஃ

### சென்னை.

கழக அமைப்பக்கூட்டம் 22-10-44 ஞாயிறு மாலை 6 மணி அளவில் சென் னைத் "தமிழ் உலகம்" பணி மனையில் கூடிற்று. தோழர். சி. பத்மனுபன் தலைமை பூண்டார். சேலம் மாநாட்டின்விளைவாக நாட்டில் ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சி குறித்துத் தலைவர் முன்னுரை மொழிந்த பின், 6, 7, 8, 9, 10, ஆகிய 5 வட்டங் களைக்கொண்ட 2வது சர்க்கிள் திரா விடர் கழகம் அமைக்கப்பட்டது. நடப்பு ஆண்டிற்குப் பின்குறித்த செயற்குழுவி னர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கழகத் தலைவர், தோழர் சி. பத்பனுபன். துணைத்தலைவர்கள், தோழர்கள் ச. ஆரோக் கியசாமி, காஞ்சி மணிமொழியார், எ, எஸ். துரைசாமி, தட்சணாமூர்த்தி. செய லாளரும் பொருளாளரும் மா. குமார சாமி. வட்டத்திற்கு இருவர் வீதம் குழு உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஃ ஃ ஃ ஃ

### மூத்தியாலுப்பேட்டை

இக்கழக அமைப்புக் கூட்டம் 22—10—44 சென்னைத் தமிழ்உலகம் நிலையத்தில் கூடிற்று. தோழர் பத்மனு பன் தலைமை பூண்டார். தோழர் எஸ். வி. லிங்கம், அவர்கள் திராவிட இன எழுச்சி குறித்து அரிய ஓர் உரை ஆற்றி னார்கள். சேலம் மாநாட்டுத் தீர்மானங் களை வரவேற்றும், தலைவர் பெரியார் அவர்கள் அன்னார் வாழ்நாள் அளவும் திராவிடர் கழகத் தலைவராக இருக்க வேண்டுமென்று தெரிவித்தும் பல்லா யிரக்கணக்கான திராவிடப் பெருங்குடி மக்கள் ஒருங்குகூடி நிறைவேற்றிய தீர் மானங்கட்கு மாறாக ஒரு சில தன்னல வாதியர் செய்துவரும் தப்புப் பிரசாரத் தைக்கண்டித்தும் சேலம் மாநாட்டு வர வேற்புக் கழகத்தார் உடனே வரவு செலவுக் கணக்குகளைத் தலைவர் பெரியா ரிடம் ஒப்புவிக்கவேண்டுமென்று அக்கழ கத்தாரை அறிவுறுத்தியும் பல தீர்மானங் கள் நிறைவேற்றப்பெற்றன. பின்னர்புது ஆண்டிற்கு டாக்டர் பாலசுந்தரம் அவர் களைத் தலைவராகக்கொண்ட செயற்குழு உறுப்பினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

——

தந்தி:—"புறமார்க்" திருச்சி.



## அக்காலமில்லை ஐயன்மீர்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்மிடம் சண்டைக்குவருகின்றனர். சிலர் தலைகளின்பேராலும் மொழியின்பேராலும் சண்டைக்குவருகின்றனர். சிலர் தமக்குத் தலைமைப்பதவி கிடைக்கவில்லையென்பதற்காகச் சண்டைக்குவருகின்றனர். மொழியைக்காக்கப்பெரியார் சிறைபுகவில்லையா? திராவிடர் இயக்கத்தில் இருக்கும் அத்துணைபேரும் சைவ வைணவ குடும்பத்தில் பிறந்தவர்களா? அன்றி வானிலிருந்து கீழேவிழுந்தவர்களா? மொழிப்பற்றில் இவர்கட்குப் பங்கில்லையா? இவர்களைக்காட்டிலும் மொழிப்பற்றுடையவர்கள் வேறுயார்? ஒருநாடு விடுதலைபெறவேண்டுமானால் அழித்தல் வேலையும், ஆக்கவேலையும் நடைபெறவேண்டுமா? இல்லையா? நாட்டிற்காகப் பாடுபடுந்தொண்டர்கள் சில சொற்றொடர்களைத் தாராளமாக வழங்குதற்கு உரிமைஉடையோரா இல்லையா? நாட்டை நமதாகப்பெற்றுவிட்டால் நமக்குவேண்டியகலைகளை யாம்போற்றாமல் அழித்தே விடுவோமா?

## தலைவராகயார் முயற்சிக்கின்றனர்?

நாடு நலம்பெறவேண்டுமானால் மொழி வளர்ச்சிபெறவேண்டுமானால்மக்கள் மாண்பு பெறவேண்டுமானால்கட்சி உருப்பெறவேண்டுமானால் பெரியார்தான் தலைவராக இருக்கவேண்டுமென நாடு கூறுகின்றது. நாட்டின் நடைமுறை அறியாதார் வேறுகூறுகின்றனர்.

## யான் தலைவனா?

தமிழ்ப் புலவர்கள் திராவிடநாட்டு விடுதலை இயக்கத்தில் கலந்துநின்று தொண்டாற்றவேண்டாமா?யான்திராவிடநாட்டு இயக்கத்திற்கலந்துநின்று பணியாற்றித் தலைவனாக முயற்சிக்கின்றேன் எனஅண்ணாமலைநகரில்உள்ள பண்டிதர் ஒருவர் என்மேல் பழிசுமத்தித் திருமுட்டத்தில் பேசியுள்ளார். இது பழிஎன்று யான் கொள்ளமாட்டேன். திராவிட நாட்டில் திராவிடன் ஒருவன் தலைவனாகஇருத்தல் தகாதா? எத்துணைபேர் தலைவராகஇருத்தல்முடியும்? ரஷ்யாவில் ஒரு ஸ்டாலின் தலைவர். ஜெர்மனியில் ஒரு ஹிட்லர் தலைவர். அமெரிக்காவில் ரூஸ்வெல்ட் தலைவர். இங்கிலாந்தில் சர்ச்சில் தலைவர். சைனாவில் ஷாங்கேஷேக் தலைவர். திராவிடநாட்டில் பெரியார் ஈ. வெ. ரா. தலைவர். இவ்வாறு ஒவ்வொரு தலைவர் இருக்கலாமேயன்றிக் குட்டித்தலைவர்கள் பலர்தோன்றினால் அந்நாடு உருப்பெற இயலுமா? இவ்வுண்மையறியாத. இவர் கூற்றை ஒருவரும் பொருட்படுத்த வேண்டாமென வேண்டிக்கொள்கிறேன்.

## பிராமணிய நாஜிஸம்

டாக்டர் அம்பேத்கார், அண்டிப் பிழைக்க வந்த ஆரியப் பார்ப்பனர் ஆளும் வகுப்பினராக மாற்றமுற்று ஏழு மாகாணங்களில், முதலமைச்சர்களாய் அமைந்து, ஆட்சி புரிந்ததையும், இந்நாட்டை ஆண்டுகொண்டிருந்த, ஆளத் தகுதியுடைய திராவிட மக்கள் அடிமையுற்று அவதியுறுவதையும் எடுத்துக்காட்டி இங்ஙனம் பிராமணியம் பிராமணர்களே ஆளும் வகுப்பினராக மாற்றிவிட்டது. இப்பிராமணியத்திற்கு ஆதாரவாயுள்ள நூல்கள் அவர்கட்கு உதவிபுரிந்து பிறரைத்தாழ்த்தி அவர்களுக்கு உதவிபுரிகின்றன என்பதை உணர்ந்தே பிராமணியத்திற்கு ஆதாரவாயுள்ள நூல்களைத் தாக்கினார். காலஞ் சென்ற 'லாலாவஜபதிராய்' அவர்கள் இங்ஙனம் பிராமணியத்திற்காதரவாயுள்ள நூல்களைத்தாக்கிப் பேசியதையும் அதற்கு மறு மொழி தர இதுகாறும் ஒருவரும் முன்வராததையும் உணர்ந்தும், மறந்தும் சர்.சி,பி. டாக்டர் அம்பேத்கார் மேல் பாய்வானேன்? ஹிட்லர் ஜெர்மனியர் ஆளப்பிறந்தவர்கள் என்று கூறுதலே போன்று பிராமணிய நாஜிஸமும்ஆளப் பிறந்ததாகவும் பிறர் அவர்கட்கு அடிமை செய்யப் பிறந்ததாகவும் கூறுகிறது. இங்ஙனம் ஒரு வகுப்பிற்கு ஒரு நீதி கற்பிக்கும் நூல்களை ஒழித்துவிட வேண்டுமென்று டாக்டர் அம்பேத்கார் கூறாதொழிந்தமைக்குப் பார்ப்பனர்கள்நன்றி செலுத்த வேண்டாமா? மத்திய ஆசியாவிலிருந்த ஆரியர்கள் இந்நாட்டிற்கு வந்தபோது அவர்களை மிக வன்மையாக எதிர்த்த ஆதித்திராவிடர்களை—ஒருஆறு கோடி மக்களை—சண்டாளர்கள் (கலப்புப்பிள்ளைகள்) என ஆரியர் தாழ்த்தி எழுதிவைத்துள்ள இவ்வேடுகளைக்காக்க விக்டோரியாமாராணியார் உறுதிமொழியைத் துணைக்கழைக்கின்றார் சர். சி. பி., விக்டோரியா மாராணியார் மொழிந்தபடி இங்ஙனம் ஒரு நாட்டிலுள்ள ஆறு கோடி மக்களைச் சண்டாளர்கள் என எழுதிவைத்திருத்தலும் நடைமுறையில் தீண்டத்தகாதார் என ஒதுக்கி அவர்களைக் கொடுமைப்படுத்தலும் குற்றமாகாதோ?

## அக்காலமில்லை ஐயன்மீர்!

முஸ்லீம் மதக் கொரானையும், கிறித்துவமதப்பைபிளையும் குறை கூறினால் சும்மாவிடுவார்களா? என நாட்டிலுள்ள சிலரை அம்பேத்காரைத்தாக்க சர். சி. பி. தூண்டுகிறார். "நாலந்தா" என்னுமிடத்தில் ஏற்பட்டிருந்த புத்தர்களின் பல்கலைக் கழகத்தை ஆரிய ஐயன்மார் நெருப்பு வைத்துக்கொளுத்திச்சாம்பலாக்கினாற்போல, வேதவேள்வியை நிந்தனை செய்தனர் என்பதற்காக மதுரையில் எண்ணாயிரம் சமணர்களைக் கழுவேற்றிக் கொன்றாற்போலப், புத்த மதத்தையும், சமண மதத்தையும் கொடிய அடக்குமுறைகளைக் கைக்கொண்டு இந்தியாவில் அழித்தாற்போல டாக்டர் அம்பேத்காரையும் அழித்துவிட ஒரு சர். சி. பியாலோ, ஒரு சாத்திரியாலோ இயலுமா? வேதத்தை எதிர்ப்பவன் சண்டாளன் என அன்று எழுதி வைத்தனர் ஆரியர். இன்று எதிர்ப்பது மட்டுமில்லை, இந்நூல்களைச் சுட்டுப்பொசுக்குங்கள் என்ற ஒலி நாட்டில் மக்கள் முழங்குகின்றனர். எந்த அதிகாரத்தைக்கொண்டு பிராமணிய நாஜிஸம் யாரை அடக்கப்பேசுகிறதோ அறியோம்! நாட்டிலுள்ள அத்துணை மக்களும் வர்ணாச்சிரம எதிர்ப்பாளராகமாற்றமுறும் பொழுது சிலர் கூறும் சில உரைகட்குச் சர். சி. பி. கோபிப்பானேன்? அந்தக்காலமில்லை ஐயன்மீர்! ஆத்திரப்படாதீர்! என அவர்கட்கு அறிவிக்கிறோம்.

## சிறப்புறச் செயலாற்றுமின்!

திராவிட நாட்டைப் பெறமட்டும் இரவு பகல் ஓய்வின்றி இத்தகு கழகங்களைக்கண்டு, திராவிட வாலிபர்கள் நாடு சிறக்கத் தன்னல மறந்து தொண்டாற்ற வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன். வாழ்க திராவிடம்! வாழிய திராவிடர்! வாழ்க தமிழ்மொழி!! திராவிட நாடு திராவிடர்க்கே!!!

---

# நன்றியறிதல்.

தில்லையில் அகில இந்தியவர்ணாசிரம சுயராஜ்ய சங்கமாநாடு என, மக்களுக்குள் சமரசத்தைப்பரப்பாது, ஏற்றத்தாழ்வை நிறுவ, பிறவியாலேயே உயர்ந்தோர் தாழ்ந்தோர் உண்டெனப் பறைசாற்றத், தன்னலமும் தற்பெருமையுமே உருவாய் கொண்டோர் கூடப்போகின்றனர். அதில் பட்டதாரிகளின் கூட்டமும் சுய நலம் காக்கும் சேம்பேரிக்கும்பலும், சூழ்ந்து பார்ப்பனப் பரதேசிப் பிரசாதம் பெறும் பணக்காரக் கூட்டமும் முனைந்து பங்கெடுத்துக்கொள்கின்றனர். நமது பாமர மக்களின் (பக்திக்குப் பண்படுத்தப்பட்டோர்) வெள்ளையுள்ளங்களிலே மண்டிக் கிடக்கும் ஆரியவண்டலின் வளப்பத்தால் இவ்வநீதிக் கொள்கைக்கு ஆக்கந்தேட முயல்வதைத் தடுக்க—தமிழ் நாட்டின் தனிப்பெருந்தலைவர் பெரியார் அவர்களின் தன்மான இயக்கத்திலே முதற் கண் காணும் சமரச அறிவை ஊட்டி, அக்கிரகாரத்தின் ஆர்ப்பாட்டம் இனிநாட்டிலே நடந்தால் எட்டிலே பொறிக்கத் தக்க, முறைகள் எதிர்ப்புகள் கிளம்பும் என்று வரலாற்றாசிரியர்களுக்குச் சான்றுகள் காட்டப்பல விடத்திருந்தும் தோழர்களையும் தொண்டர்களையும் கூட்டுவித்து, திட்டம் பல வகுத்து அதன்படி நடம்பித்து, பெருமிதமான மாறுபாட்டை வெளிப்படுத்தத், தனித்த முறையிலும் அறிக்கைகள் மூலமும் அழைத்திருந்தோம்.

அந்நேரத்திலே அவசரமாகஅரசியலார் ஆரியத்துக்கு ஆதரவாக தடை உத்தரவைப்போட்டுவிட்ட,செய்தியறிந்து தந்தி மூலம் தெரிவித்தோம். அதை அறிந்தும் 7-ம் தேதி ஆயிரக்கணக்கானவர் கூடி,

(10-ம் பக்கம் பார்க்க)

# நம்புரட்சிக் கவிஞரின் புதிய நூல்கள்!

1. **காதல் நினைவுகள்** 0—12—0
(அருமையான காதற்சித்திரங்கள் பாடல்கள் அனைத்தும் ஒப்பற்றவை)

2. **நல்ல தீர்ப்பு** 0—9—0
(உன்னத சிறுநாடகம்)

3. **அழகின் சிரிப்பு** 1—4—0
(இயற்கையை வர்ணிக்கும் பாடல்களின் அழகு நம்மைச்சிறக்கவைக்கின்றது. அழகிய காலிகோ பைண்டு இரண்டாம் பதிப்பு)

4. **இருண்டவீடு** 1—0—0
(கல்வியற்ற ஒரு குடும்பத்தின் நகைச்சுவையான வரலாறு)

5. **இசையமுது** 1—0—0
(உணர்ச்சியான—சுவை நிரம்பிய இசைப் பாடல்கள்)

## அச்சிலுள்ளவை!

6. **பாரதிதாசன் கவிதைகள்** (உயர்ந்த பதிப்பு)
7. **பாண்டியன்** பரிசு (பெரிய காவியம்)
8. **எதிர்பாராதமுத்தம்** (காதல்நிகழ்ச்சி)
9. **பாரதியார்** (நடைச்சித்திரம்)
10. **குடும்பவிளக்கு** (இரண்டாம் பகுதி விருந்தோம்பல்)

கவிஞர், தலைவர், தளபதி, அழகிய படங்கள் தனித்தனி இரண்டணா.

கிடைக்குமிடம்:—

**முல்லைப் பதிப்பகம்**

தபாற்பெட்டி 1374

59, பிராட்வே: சென்னை.


## நன்றியறிதல்

(9-ம் பக்கத் தொடர்ச்சி.)

னர். தடைஉத்தரவை மீறவேண்டும் என உணர்ச்சிப் பெருக்கிலே கிளம்பிய தோழர்களைத்தடுத்து விட்டோம். நிலையறிந்து மீண்டனர் பல தோழர்களும். நீதிபற்றி நிலையுணர்ந்த அரசியலார் 2 நாட்களில் தடைஉத்தரவைத் தள்ளி விடவே, 11ம் நாள் நடத்திய கூட்டத்திற்கு மீண்டும் வந்து கூடிய தொண்டர்களுக்கும் தோழர்களுக்கும் எங்கள்நன்றி உரித்தாகுக. இதுபற்றிப் பொருளுதவி புரிந்தவர்களுக்கும் எங்கள் நன்றி உரியதாகுக.

குறிப்பு:— வரும் ஆண்டுகளில் தென்னாடெங்கும் அக்டோபர் 7ம் நாளன்று சனாதன ஒழிப்புக் கூட்டங்களும், வர்ணாசிரமக் கொடும்பாவி எரித்தலும் ஆங்காங்கு நடத்தத் திட்டமிட்டுச் சென்றார்கள் என்பதையும் அறிவித்துக் கொள்கிறோம்.

திராவிடர் கழகத்தார்

சிதம்பரம்.

—

## தமிழ்ப்பண்ணைத் திறப்புவிழா

### மேட்டூர் அணை

முத்தமிழக் கலை வளர்ச்சியின் பொருட்டு இவ்வூரில் நிறுவப்பட்டுள்ள தமிழ்ப் பண்ணையின் திறப்புவிழா இன்று மாலை 4-மணிக்கு அரசாங்கப் போதனா முறைப் பாடசாலையில் நடைபெற்றது.

சர். பி. டி. ராஜன், அவர்கள் பண்ணையைத் திறந்துவைத்துத் தமிழுணர்ச்சி ததும்ப அரைமணி நேரம் சொற்பொழிவாற்றினார்.

சேலம் மாவட்டக் கல்வி அதிகாரி திரு. என். டி. சுந்தரவடிவேலு, அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

ஆசிரியர் திரு. அ. வரதநஞ்சையப் பிள்ளை "செஞ்சொற் கவி இன்பம்" என்பதுபற்றியும் திரு, மு. இராசகோபாலன் பி. ஏ., "தமிழன் உள்ளம்" என்பதுபற்றியும் டாக்டர் முத்து நமச்சிவாயம் "பழந்தமிழ்ப் பண்பாடு" என்பது பற்றியும், புலவர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர். "தமிழின் சிறப்பு" என்பது பற்றியும் விரிவாகச் சொற்பொழிவாற்றினர். திரு. இளங்கண்ணன், "கழனி" என்னும் செந்தமிழ் வெளியீட்டை வெளியிட்டார்.

தலைவர் முடிவுரைக்குப்பின், செயலாளர் திரு. புத்தனேரி,ரா. சுப்பிரமணியன் நன்றிகூறியவுடன் விழா இனிது முடிவடைந்தது.

# பார்வதி பி. ஏ.

(2-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வளவு பாழ்படவேண்டுமா சித்தம் என்றசஞ்சலம் பிறந்தது, பிறகு, கோபமே பிறந்தது, மனதிலே ஒரு மகத்தான கேள்வி கூத்தாடத்தொடங்கிற்று, "ஆம்! சைவத்திற்காகக் கண்ணைத்தந்தார், பெண்ணைத்தந்தார், கறியாகப்பிள்ளையைத்தந்தார் பக்தர்கள்; மெய்த்தச்சரி, சைவம் என்ன தந்தது? சாந்தியை அளித்ததா, சமரசத்தைத்தந்ததா, வாழ்க்கையிலே நிம்மதியைத்தந்ததா, சமுதாயத்திலேஒற்றுமையைத்தந்ததா,இருள் துடைத்ததா?இன்பத்தைஅனுப்பி, மருளை ஒழித்ததா? மடைமையைஅழித்துத் தன்னலத்தைத் தகர்த்ததா? பொதுநலனைப் பீடத்தமர்த்தி என்னதந்தது? இல்லையென்னாது எதையும்தந்த பக்தர்களிடம் பலப்பல பெற்றபிறகு, ஏதுமறியாப் பாமரரும் ஏதேதோ தந்ததைப்பெற்றபிறகு, புலவர்களின் பாசுரம் பூமான்களின் பொன்னுடை, இசைவாணரின் இருதயகீதம் என்று எவ்வளவோபெற்றுக்கொண்ட எம்மான், சைவத்தைக்கைக்கொண்டவருக்குத் தந்ததுஎன்ன? தரித்திரத்தைத்தந்தவர் யார்? நோய் தந்தது எவர்? சூதும் பொய்யும் வஞ்சனையும் வாட்டமும் கூத்தாடவிட்டது யார்? என்ற கேள்வி சன்மார்க்கத்தின் உள்ளத்திலே பிறந்து, வளர்ந்து, அவனுடைய தூக்கத்தையும் கெடுக்கத்தொடங்கிற்று. பட்டையாக அவன் அணிந்திருந்த திருநீறும், தங்கமுலாம்பூசிய உருத்திராட்சமும், நித்த நித்தம் அவன்ஓதும் தேவார திருவாசகமும், மணிகண்டருக்குத், தவறான எண்ணத்தைத்தந்தன, மகன், சைவநெறியிலே அளவுகடந்த பற்று வைத்துவிட்டான், என்ற எண்ணத்தை! அவர் அறியார் பாவம், சிவசின்னங்கள் அணிந்திருந்த சன்மார்க்கத்தின் அகம், சைவத்தைக் கடந்துவேறு உண்மைகள் என்னஉள, எங்குஉள என்ற ஆராய்ச்சியிலே ஈடுபட்டுவிட்டதுஎன்பது. பொன்னார்மேனியனே!—என்ற பாசுரத்தைப் பாடுவான் சன்மார்க்கம் காலையிலே, **அதேஅடியைத் திரும்பத் திரும்பக்கூறு**வான் பலமுறை, அவன் முகத்திலே ஓர் புன்னகைதவழும் அதுபோது. பொன்னார்மேனியனே என்ற பதிகத்தைப் பாடத்தொடங்கியஉடனே, என்மகனுடைய அகக்கண்கள் முன்பு, அரன் தோன்றுகிறார், என்அப்பனின் திவ்ய சொரூபத்தைக்கண்டு ஆனந்தத்தால் சன்மார்க்கன் மெய்மறந்துவிடுகிறான்-என்று மணிகண்டர் கருதினார். உண்மையோ அதுவல்ல!

இதுஎன்னபக்தியாபணப்பிரேமையா? ஆண்டவன் எப்படி இருக்கிறார்என்பதை விளக்கும்பாசுரம்பாடவேண்டியவருக்குப் பொன்னின்மீதன்றோ பாசம் செல்கிறது, பொன்னே, மணியே, முத்தே, மாணிக்கமே, என்று கேவலம் செல்வச் சின்னங்களைப் போய்ச்சைவத்தின் சின்னமும் சிகரமுமென சிவனுக்கு ஒப்பு கூறுவதா? இது பக்தியின் விளைவாகத் தெரியவில்லையே, சிவனாரிடம் இருக்கும் பக்தியை விடப் பொன்னிடமன்றோ அதிகப்பிரேமை இருப்பதாகத் தெரிகிறது, இது முறையாகுமா?—என்று எண்ணியே சன்மார்க்கன் சிரிப்பது வழக்கம், சிவசொரூபத்தைக் கண்டல்ல.

ஒருநாள், மணிகண்டர் மனையிலே, ஒரு சம்பவம் நடைபெற்றது. மகனுக்கு அன்று ஓர் அரிய உபதேச உரையாற்றினார் தகப்பனார். "சன்மார்க்கா! சைவத்தின் பெருவெற்றிகளைக்கேள்.மருள்நெறிகளை நமது மதம் மாய்த்திட்ட மகிமையைக்கேள், தர்க்கம் என்ற ஆயுதத்தைப் பிறசமயத்தவர் நமது அன்பு நெறிமீது வீசியபோது, அரன் அந்த ஆயுதத்தின் முனை மழுங்கச் செய்த அதிசயத்தைக் கேள்! வேதத்தை இகழ்ந்து வேள்வியைப் பழித்து, நாதனை நம்பாமல், உலவினர் சமணர் என்றோர் கூட்டம். கொல்லாமை என்றோர் விரதம் பூண்டோம், இக் குவலயமெங்கும் அதனைக்கொடி கட்டிப் பரப்புவோம் என்று கூறினர், ஆயினும் என், நமது சைவம் அவர்களைச் சும்மா விடுமோ. அரிமாபோலப் பாய்ந்தது அமணர்கள் மீது. ஞானசம்பந்தரெனும் நமது சைவப்பெரியார் சரங்களை வீசினார். சடாட்சரத்தின் முன்பு மொட்டையராம் அமணர், நிற்கமுடியுமோ? வாதிலே தோற்றனர் வம்பர், பிறகு, 8000 சமணர்களைக் கழுவிலேற்றினர், மாண்டனர் அம்மக்கள், மீண்டது சைவத்தின் மாண்பு."

இந்தச் சொற்பொழிவைக்கேட்டதும் சன்மார்க்கத்தின் கண்களிலே நீர் தாரை தாரையாகப் பொழிந்திடக் கண்டார் மணிகண்டர், அழுதால் உன்னைப்பெறலாமே என்றும், கசிந்து கண்ணீர்மல்கினால், காணலாமே என்றும், அடியவர்கள் கூறின அருள் மொழிப்படி, சன்மார்க்கன் அழுவதாக எண்ணி அகமிக மகிழ்ந்தார்.

**"8000 சமணர்களா அப்பா!" என்று** கேட்டான் சன்மார்க்கன். "8000 கழுவிலே மாண்டனர், கணக்கிலடங்காதவர்கள் வேறு முறைகளிலே நறுக்கப்பட்டனர். சமணம் சாய்ந்தது சன்மார்க்கா!' என்று பூரிப்புடன் கூறினார், மணிகண்டர் மகனிடம். சன்மார்க்கனின் கண்கள் மங்கலாயின, மயக்கமுற்றான், சாய்ந்தான் கீழே! தண்ணீரைத் தெளித்தார் தகப்பனார், திருநீற்றைப்பூசினார் முகமெலாம், கண்திறந்தான்சன்மார்க்கன், 'மகனுக்குச் சைவைத்தின் பெருமையைக் கேட்டதால் மெய்சிலிர்த்து மயக்கமும் வந்துவிட்டது" என்று கூறினார் மணிகண்டர். இந்த விசேஷ நிகழ்ச்சியையொட்டிவிசேஷ பூஜையும் நடத்தினார். **ஆனால் சன்மார்க்**கனின் மயக்கத்துக்குக் காரணம் வேறு. அன்புநெறியினால் 8000 சமணர்களின் தலைகள் அறுபட்டனவாமே!இரக்கமின்றி அவர் தம் இரத்தத்தைக் குடித்த இச்சைவமா அன்புநெறி. இம்சை செய்து எதிர்க்கட்சியை ஒழித்த இதுவா அன்பு முறை. 8000 சமணர்களைக் கொலை செய்த பலிபீடமா பகவானுக்கு இருப்பிடம்—என்று எண்ணி ஏங்கிச் சோகித்துப்பயந்து மயங்கிக்கீழேசாய்ந்தான்

கடைசியாகச் சன்மார்க்கனை, வேறு மார்க்கத்திலே போகச்செய்த சம்பவம், வேடிக்கை நிரம்பியது. தகப்பனார் ஒரு நாள் தனயனுக்குச் சைவஸ்தலங்களின் பெருமைகளைக் கூறிக்கொண்டிருந்தார். ஏதோ ஏட்டைப் படித்துக்கொண்டிருந்தான் சன்மார்க்கன். தகப்பனார் அழைத்தார், பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்,அப்பேச்சுத்தலமகிமைகளின் ஆராய்ச்சியிலே கொண்டுபோய் நிறுத்திற்று.

"சன்மார்க்கா! சிவதலங்களிலே சிரேஷ்டமானது திருவண்ணாமலை, அடிமுடி தேடி அரியும் அயனும் அலைந்திட்டஇடம் அருணாசலம்! ஆண்டவனின் ஜோதிவடிவைக்காட்டும் இடம் அண்ணாமலை! அதன் பெருமையை ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேடனாலும் உரைத்திட இயலாது. அத்திருவண்ணாமலைக்குச் சென்று வரத் தீர்மானித்திருக்கிறேன்" என்றார் மணிகண்டர்.

"எப்போது?" என்று கேட்டான் சன்மார்க்கன்.

"நன்று என்பதை இன்றே செய்க என்பர் பெரியார். நாம் நாளைக்கேனும் புறப்படவேண்டும் அண்ணாமலைக்கு. நாளைப்போகாமல் இருப்பேனோ என்று நந்தன் பாடிக்கிடந்ததுபோல நாம் இரோம். நாளை செல்வோம் அண்ணாமலைக்கு. இந்தத் திருவண்ணாமலையின்பெருமையை நீ தெரிந்துகொண்டால் இப்போதே புறப்படவேண்டுமென்று கூறுவாய். கேள் அதன் மகிமையை.

"சத்தபுரியே முதலெடுத்த
தலம் யாவு மோது
நட்டுமோது நட்ட நனிலே
அத்தலமு மிட்டெதிர் நிறுக்க
வவைகட்கதிக
மான தோளிரந்த நகரம்......"

தலங்கள் பல, அத்தலங்கட்குள்ளே. உன்னதமானவைகளென்று சப்ததலங்களைக் குறிப்பிடுவார்கள் பெரியவர்கள். அவையாவன, அயோத்தி, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி. துவாரகை, எனும் ஏழு தலங்களாம்.

ஆனால் கேள் மேலும் கூறுவதை. இப்படிப் பெரியவர்கள் புகழ்திருக்கிற இந்த ஏழுதலங்களையும் தாரசின் ஒருதட்

(12ம் பக்கம் பார்க்க)

# பார்வதி பி. ஏ.

11-ம் பக்கத்தொடர்ச்சி.

டிலே வைத்துமற்றொரு தட்டிலே திருவண்ணுமலையை வைத்தால், இந்த எழுதலங்களைவிடத், திருவண்ணுமலையின் எடையே அதிகமாக இருக்கும். அவ்வளவு பெருமை பொருந்திய இடம் அண்ணுமலை. "இதனை அருணசல புராணத்திலே காணலாம்."

மணிகண்டர், கூறியதலமகிமையைக் கேட்ட சன்மார்க்கன் கடகடவெனச் சிரித்தான். "ஏன்! என்ன சிரிப்பு? காரணம்?" என்று படபடத்துக்கேட்டார் தகப்பனர், சன்மார்க்கன், "அப்பா!நான் சற்றுநேரத்துக்கு முன்பு திருவிளையாடற் புராணத்தைப் படித்துக்கொண்டிருந்தேன். அதை நினைத்தேன், சிரித்தேன்" என்றுரைத்தான். "விளங்கவில்லையே!" என்றார் கொஞ்சம்வியப்புடன்தந்தை. "எனக்குங்கூடத்தான் விளங்கவில்லை" என்று சொன்னன் சன்மார்க்கன்.

"எது விளங்கவில்லை?" என்று கேட்டார் மணிகண்டர்.

"எதனை நம்புவது என்று விளங்கவில்லை. ஏன் இந்தப்புளுகுப் போட்டி நடக்கிறது என்று விளங்கவில்லை. எப்படி மக்கள் இவ்விதமான பொருந்தா உரைகளைப் போற்றுகிறார்கள் என்பது விளங்கவில்லை. ஏன் புலமையின்போராலும் பக்தியின் போராலும் புரட்டுரைகள் புகலவேண்டும் என்பது விளங்கவில்லை" என்று சன்மார்க்கம், மளமளவென்று கேள்விகளை வீசினன். திகைத்துப் போனர் மணிகண்டர். சன்மார்க்கன் கேள்விகள்கேட்டது அவருக்குத் தூக்கிவாரிப்போட்டது. சோலைகிவிட்டது. பூங்காவனத்துக்குயில் என்று எண்ணிக்கொண்டு அருகேபோக அது நீங்காவிஷத்தைக்கொண்ட கருநாகமாகக் காட்சிதந்தால் திகைப்பு ஏற்படுவது போலாகிவிட்டது மணிகண்டருக்கு.

"சன்மார்க்கம்! நீ என்னசொல்கிறாய்? நிலை தவறியவன்போலப்பேசுகிறாயே, என்ன விஷயம்?" என்று கொஞ்சம் ஆயாசத்துடன்கேட்டார்.

"நிலைதவறவில்லைத்தந்தையே, புராணவலை தவறிவிட்டது என்னைச் சிக்கவைக்கமுடியாமல்" என்று பதிலுரைத்தான் சன்மார்க்கன். சிவ, சிவா, என்றார், செவிகளைமுடிக்கொண்டு, மணிகண்டர். புயல் அடங்கவில்லை.

"நான்கேட்கிறேன், நீகூறு. அருணசல புராணிகன் ஒரு சைவன்தானே, அண்டப்புளுகு எழுதினனே அவன் தகுமா? திருவண்ணுமலையின் மகிமையைக்கூறவேண்டுமானல் ஒரு திடீர்ப் புளுகுதானதேடவேண்டும், உண்மையிடம் ஏன் இவ்வளவு வெறுப்பு. தராசுத் தட்டிலே எழுதலங்களைவைத்தாராம் அண்ணுமலையின் கனம்அதிகமாம், ஏன் இப்படிப் புளுகவேண்டும்? மதுரையைவிட அண்ணுமலைத்தலம் அதிகமகிமையுடையது என்று அருணசலபுராணிகன் எழுதியதை நம்புவதென்றால், திருவிளையாடல் புராணத்தைநான் தீயிலே போட்டாகவேண்டுமே. அதிலே மதுரைதான் மற்றஎல்லாத்தலங்களினும்மேலானது என்று கூறப்பட்டிருக்கிறது. இருவரிலே யார் புரட்டர். எவர்பேச்சை நான் நம்புவது. தராசிலே நிறுத்தால் அண்ணுமலையின் எடையே அதிகமாகுமாம், அருணசல புராணத்தின்படி, திருவிளையாடற்புராணத்திலே பிரம்மனே தராசிலே, ஒருதட்டிலே கைலாயம் உட்பட எல்லாத்தலங்களையும் வைத்தாராம், மற்றோர் தட்டிலே மதுரையைவைத்து நிறுத்துப்பார்த்தாராம், மதுரைதான் எடைஅதிகமாம், இதற்கென்னசொல்கிறீர்?

"கைத்தல நான்கிரண்டுடைய மலர்க்
கடவுள் மேலொருநாள் கைலையாதி
எத்தலமும் ஒருதுலையிட்டுத் தல
முமொருதுலையிட்டிரண்டுந்தூக்கி,
உத்தமமாம் திருவாலவாய் மிகவுங்
கனத்தது கண்டுலகின்மேலா,
வைத்ததலமிதுவேன்றல் இதன்
பெருமையாவரே வழுத்தற்பாலார்.

என்று திருவிளையாடற் புராணம் கூறுகிறது. இப்படி ஒருவரை ஒருவர் பொய்யராக்கி, மக்களை மடையர்களாக்கி, மனதைக்குழப்பிக் கெடுக்கும் இவர்தம் மதமொழிகளை இனிக்கேளேன்" என்றான் சன்மார்க்கன். மணிகண்டர், மார்பிலே கைகளால் அறைந்து கொண்டார், தலையிலே மோதிக்கொண்டார், சிவ நாமத்தைச் ஜெபித்தார், அழுதார், "பாபி! நாத்திகா! உன் நாபுழுக்க! விழலுக்கு இறைத்தேனே, வீணனே, விஞசகாலமா உனக்கு," என்று கூவினர், "போ, வெளியே போய்விடு, என் வீட்டிலே இராதே, சிவத்துரோகிக்குஇங்கே இடமில்லை, போ" என்று உத்தரவிட்டார், வெளியே சென்ற சன்மார்க்கமே, பிறகு மார்க்க சகாயப்பாதிரியாகி, மக்களின் ஊழியனகி, ஏழைகளுக்கு இலவசப்படிப்பு, வைத்தியவசதி முதலிய நற்றொண்டுகளைப்புரிபவனகி, சேரி மக்களிடையே பழகி அவர்களிடையே அன்பு வளரச்செய்து, அந்த வட்டாரத்திலேயே, உத்தமன் என்ற பெயர் எடுத்தான். பூராச் சொத்தையும் சிவன் கோயிலுக்கு எழுதி வைத்துவிட்டுச் சில வருஷங்களிலே மணிகண்டர் இறந்துபோனர்,தன்மகனை மீண்டும் காணமலேயே.

இந்த மார்க்கசகாய பாதிரியார்தான், கற்பையும் உயிரையும் இழக்க இருந்த பார்வதிக்கு, எதிர்பாராதவிதமாக உதவியாகவந்தார். பார்வதி சேரியின் பக்கம் சென்றபோது சிலர், கிருஸ்தவப் பிரசாரத்திற்காகத்தான் போவதாக எண்ணிக்கொண்டுஏசினர்கள் என்றுமுன்னம்கூறினேம். ஏசினர்பலர் என்றாலும், இரண்டொருவர், முரடர்களால் அந்தஅம்மைக்குஆபத்து ஏதேனும் நேரிட்டு விடுமோ என்று பயந்தனர். அவர்கள்தான் மார்க்கசகாயப்பாதிரியாரிடம், யாரோ ஒரு இளமங்கை, கிருஸ்தவப்பிரசாரம் செய்யச் சேரிப்பக்கம் போகிறார்கள், கலகம்விளையும்போலவாடைஅடிக்கிறது என்று கூறினர்கள் ஓட்டமும் பெருநடையுமாகப் புறப்பட்டார் பாதிரியார், போலீசுக்கு. போலீஸ் புறப்படுவதற்கு முன்பு கிளம்பினர் சைக்கிலில். பாதிவழியிலே சைக்கில் கெட்டுப்போகவே, அதை ஒரு மரத்தடியிலேகிடத்திவிட்டு, மேல்மூச்சுவாங்க வாங்க ஓடினர், பார்வதி சென்றபாதைவழியாக. சரியான சமயத்திலே வந்துசேர்ந்தார், பார்வதியைக் காப்பாற்றினர். தங்கள் ஏற்பாடுகளைக் கெடுத்துவிட்ட பாதிரியைப், பார்த்திபனும் அவன் ஆட்களும் சூழ்ந்துகொண்டனர். பார்த்திபன்பாதிரியாரின் கன்னத்திலேஒருஅறைகொடுத்துவிட்டு, உரத்த குரலிலே சிரித்துக்கொண்டே, "ஒரு கன்னத்திலே அடித்தால் மற்றொரு கன்னத்தைத் திருப்பிக்காட்டும்படி உங்கள் ஏசு சொன்னாரல்லவா?" என்று கேட்டான். பாதிரியார் பதில் ஏதும் கூறவில்லை. புன்சிரிப்புடன் பார்த்திபன் எதிரே நின்றார். (தொடரும்)

---

# திராவிடமாணவர் கூட்டம்.

6—10—44 மாலை பொன்மலை திராவிட வாலிபர் கழககட்டிடத்தில் திராவிட மாணவர்களின் பொதுக்கூட்டம் தோழர் நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது. திராவிட மாணவர்கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதற்கு தலைவராகதோழர் T.ராதாகிருஷ்ணன், உதவித் தலைவர் காளிமுத்து, செயலாளராகச் சிவஞானம், உதவிச் செயலாளராக இயேசுதாஸ், பொக்கிஷதாராக, V. சௌரிராஜன், மற்றும் 5 கமிட்டி அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.